Registered as a News Paper

பொழிவு: 28
குவிப்பு: 07
பக்கங்கள்:08
விலை: 50/-
ஆடி: 2023

(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

"ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 42வது ஆண்டுப்பயணம்"

## மடுத்திருத்தலத்தின் ஆடித் திருவிழா



எமது மறைமாவட்டத்தின் இதயமாகிய மருதமடு அன்னையின் ஆடித்திருவிழா கடந்த ஆனி மாதம் 23ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் திருப்பலிகள் இடம்பெற்றன. கடந்த 01.07.2023 சனிக்கிழமை அன்று வெஸ்பர் ஆராதனை இடம்பெற்றது. 02.07.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 06.15 மணிக்கு திருவிழா திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் அன்ரன் றஞ்சித் ஆண்டகை, மற்றும் குருக்கள் இணைந்து அன்னையின் திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுத்தனர். திருப்பலியை தொடர்ந்து மடு அன்னையின் திருச்சுருப ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. இப் பெருவிழா திருப்பலியில் சுமார் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 1924ம் ஆண்டு ஆடி 02ம் திகதி மருதமடு திருப்பதியிலே பல ஆயர்கள் கூடி மருதமடு அன்னைக்கு முடி சூட்டுவிழா இடம் பெற்றது. குறித்த விழாவின் நூற்றாண்டு நிறைவு யூபிலி பெருவிழா எதிர்வரும் 2024ம் ஆண்டு ஆடி மாதம் 02ம் திகதி கொண்டாடப்படவுள்ளது. அதனை முன்னிட்டு பெருவிழா திருப்பலியின் முடிவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் யூபிலி நூற்றாண்டு விழாவினை பிரகடனம் செய்து வைத்தார். அதனை வெளிப்படுத்தும் முகமாக யூபிலி கொடி மருதமடு ஆலய முன்றலில் ஏற்றி வைக்கப்பட்டது. இறுதியில் திருச்செபமாலை வடிவில் பலூண்கள் பறக்கவிடப்பட்டது.

ஆயர்தந்தை அவர்கள் தமிழில் ஆற்றிய மறையுரையின் தொகுப்பு 2ம் பக்கத்தில் உள்ளது. ●

## குருத்துவ திருநிலைப்படுத்தல்



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூன்று திருத்தொண்டர்கள் கடந்த 13.07.2023 வியாழக்கிழமையன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் குருக்களாக அருட்பொழிவு செய்யப்பட்டார்கள்.

அருட்பணி யேசுநேசன் ஜெல்த்சின் சார்லஸ், அருட்பணி பிரான்சிஸ் சேவியர் றஜீவன் லியோண், அருட்பணி பங்கிராஸ் ஸ்ரனி (IVD) ஆகியோரே குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்.

பணிவாழ்வில் கால்பதிக்கும் எம் இளம் குருக்களுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக செபம் கலந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம். ●

## திருக்குர்ஆன் எரிக்கப்பட்டது குறித்து திருத்தந்தை கண்டனம்

எந்த ஒரு நூலும் அதனை விசுவசிப்பவர்களுக்கான மதிப்புடன் மதிக்கப்பட வேண்டும் மற்றும் பேச்சு சுதந்திரம் என்பது மற்றவர்களின் மனதைப் புண்படுத்தப் பயன்படுத்துவதற்கானது அல்ல



சுவீடன் நாட்டில் இஸ்லாமியர்களின் புனித நூலான திருக்குர்ஆன் எரிக்கப்பட்டுள்ளது குறித்து தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார்

திருத்தந்தை பிரான்சிஸ். ஐக்கிய அரபுக் குடியரசின் Al-Ittihad என்னும் தினஇதழுக்கு வழங்கிய நேர்முகத்தில் திருத்தந்தை அவர்கள் கூறியதாவது, மனித உடன்பிறந்தநிலை என்ற ஏட்டில் வெளியிடப்பட்டுள்ள மதிப்பீடுகளை ஒவ்வொருவரும் தங்கள் இதயங்களில் தாங்கி செயல்பட வேண்டும் என்ற விண்ணப்பத்தையும் விடுத்துள்ளார்.

→03

## ஆயர் அமரர் இராயப்பு யோசேப்பு கல்வி நிதி

அன்பின் இறைமக்களே, ஆயர் அமரர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையின் சிந்தனையில் என்றுமே காணப்பட்ட ஒரு விடயம் வறிய பிள்ளைகளின் கல்வியாகும். இதனால் ஆயர் தன்னுடைய பணிக் காலத்தில் ஏராளமான வறிய பிள்ளைகள், மற்றும் தாய், தந்தையை இழந்த பிள்ளைகள் என்று கல்வி கற்பதற்கு வசதியில்லாத நூற்றுக்கணக்கானவர்களின் கல்விக்கு உதவி செய்துள்ளார். இவர்களுள் கஸ்ரப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களும் அடங்குகின்றார்கள். ஆயர் அவர்கள் வறிய மாணவர்களின் கல்விமேல் கொண்ட அக்கறையை தொடர்ந்து செய்வதற்காக கடந்த ஏப்ரல் மாதம் 1ம் திகதி அதாவது ஆயர் அமரர். இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையின் இரண்டாவது நினைவு ஆண்டில் ''ஆயர் இராயப்புயோசேப்பு கல்வி நிதி'' எனும் வறிய மாணவர்களின் கல்வியை மையப்படுத்திய நிதி சேகரிப்பை நாம் ஆரம்பித்துள்ளோம்.

ஏற்கனவே ஆயரினால் ஆரம்பிக்கப்பட்ட கல்வி உதவிப்பணிகள் தொடர்ந்து நடை-பெற்றுக் கொண்டிருந்தாலும் அவர் பெயரால் ஒரு புதிய கல்வி நிதியை ஆரம்பித்து அதன் மூலம் இன்னும் அதிகமான பிள்ளைகளின் கல்விக்கு உதவி செய்வதே எமது நோக்க-மாக உள்ளது. எனவே உங்களில் யாராவது இவ்வுயரிய தூரநோக்குக் கொண்ட கல்விப் பணிக்கு உதவி செய்ய விரும்பினால் பின்வரும் வங்கிக்கணக்கிற்கு உங்களின் அன்பளிப்பினை வைப்புச்செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**வங்கியின்பெயர்: Hatton National Bank (HNB)**
**வங்கிக்கணக்கின் பெயர் : Bishop Rayappu Joseph Education Fund**
**கணக்கிலக்கம் : 020020401201**

**குறிப்பு:**

இது பற்றிய மேலதிக விபரங்களுக்கோ அன்றேல் நீங்கள் வைப்பிடும் நிதி பற்றிய தெரியப்படுத்தலுக்கோ எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**குருமுதல்வர், மன்னார் மறைமாவட்டம் - 0232222710**
**இயக்குநர், வாழ்வுதயம் - 0232222140**

## 2025ம் ஆண்டு திருஅவையின் யூபிலி ஆண்டு




2025ம் ஆண்டை எம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உலகளாவிய ரீதியில் யூபிலி ஆண்டாக கொண்டாட அழைப்பு விடுத்துள்ளார். இவ்யூபிலி ஆண்டை "Pilgrims of Hope" "நம்பிக்கையின் திருப்பயணிகள்" எனும் கருப்பொருளில் கொண்டாட அழைப்பு விடுக்கின்றார். இவ்யூபிலி ஆண்டுக்கான அர்த்தமுள்ள இலட்சனையும் வெளியிடப்பட்டுள்ளது. இதில் பொறிக்கப்பட்டுள்ள மனித உருவங்கள் உலகின் நான்கு திசைகளில் இருந்தும் வரும் மனிதர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

அவர்கள் ஒருவரை ஒருவர் அரவணைத்து செல்வது, நம் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய புரிந்துணர்வையும், ஒற்றுமையையும் குறித்துக்காட்டுகின்றது. மேலும் படகின் அணியம் போல உள்ள சிலுவையை பிடித்திருப்பது, வாழ்க்கைப் படகில் கைவிடாமல் நம்பிக்கையோடு இயேசுவை இறுக்கமாக பற்றிக்கொள்ள வேண்டும் என்பதையும் கீழே காட்டப்பட்டுள்ள அலைவடிவம் திருப்பயணத்தில் நாம் சந்திக்கும் பல சவால்களை தெளிவுபடுத்துகின்றது.

→03

## அறிவித்தல்





மருதமடு அன்னையின் முடிசூட்டு விழாவின்
நூறாவது ஆண்டு யூபிலி விழா முழு பதிப்புரிமையும்
மடுப்பரிபாலகர், மடுக்கோயில் நிர்வாகத்திற்கே உரியது

மருதமடு அன்னை முடிசூட்டு விழாவின் நூறாவது ஆண்டு யூபிலி விழாவை (2023.07.02 - 2024.07.02) சிறப்பிக்கும் முகமாக பிரசுரிக்கப்படுகின்ற சுவரொட்டிகள். பதாதைகள். முத்திரைகள். படஒட்டிகள். வெரோணிக்கங்கள். மாபிள் பொருட்கள் உள்ளிட்ட அனைத்திற்கும் மடுப்பரிபாலகர். (மடுத்தேவாலயம். மடு) மட்டுமே முழு பதிப்புரிமையும் உரித்துடையவரும் ஆவார்.

# மன்னா

## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

**கிறிஸ்து இயேசுவில் அன்பார்ந்த மன்னா வாசகர்களே!**

தற்கால சூழ்நிலையில் உலகம் முழுவதிலும் அபிவிருத்திகள், வளர்ச்சிகள், முன்னேற்றங்கள் காணப்பட்டு வந்தாலும் அதே சமயம் அதைவிட பெரிய அழிவுகள், பெரிய அரசியல் மாற்றங்கள், பலதரப்பட்ட உலக யுத்தங்கள், இன்னும் பொருளாதார நெருக்கடிகள், சமயசீர்கேடுகள் இவ்வாறு பல இந்நாட்களிலே உருவாகி கொண்டிருப்பதை நாம் அறிவோம். நாடுகளை நாடுகள் வன்முறையினூடாக, ஆயுத கலாச்சாரம் ஊடாக அழிப்பதற்குரிய முயற்சியும், இன்னும் உக்ரேன் ரஷ்யா போரும் தொடர்ந்தும் நடந்து கொண்ட வண்ணமாக இருக்கின்றது. அதேபோல ஒருநாடு இன்னோர் நாட்டை அடிமைப்படுத்தி வாழுகின்ற கலாச்சாரம் இப்போது மிக விரைவாக நடந்து கொண்டிருக்கின்றது. உலகம் அழிவின் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது.

ஒருகாலத்தில் அபிவிருத்தி, முன்னேற்றம் என்று கண்டுபிடிக்கப்பட்ட காரியங்கள் இப்போது அது எமக்கு எமது உடலுக்கு, எமது வாழ்க்கைக்கு கேடு விளைவிக்க கூடியதென்று சொல்லி இன்று பேசப்படுகின்றது. குடிபோதைகள் மனிதனுக்கு தேவை என்று சொல்லி ஆரம்ப கண்டுபிடிப்புகள் இருந்தாலும் அது முற்றிலும் கேடானது என்று சொல்லி இப்பொழுது அறிவுறுத்தப்படுகின்றது. புகைத்தல் மனிதனுக்கு நல்லது என்று சொல்லி உலகம் கருதுகின்ற அதேவேளை புகைத்தலினாலே அதிக கேடுகள், அழிவுகள், நோய்கள் தோன்றுகின்றது என்பது இப்பொழுது அறியப்படுகின்றது.

இவ்வாறாக காலங்கள் உருண்டு கொண்டிருக்கிற பொழுது, இன்பமும், துன்பமும் மாறிமாறி வருவது போல், கடவுள் பக்தி ஒரு காலத்தில் பெருகி இறைவனே தஞ்சம் என்ற வாழ்க்கை மனிதர்களின் எல்லா நிலையிலும் இருந்து பொருளாதார, அபிவிருத்தி, கல்வி, பணம், பதவி, பட்டம், பெருமை, அயலவர்மீது அன்பு இல்லாமை, போட்டி, பொறாமை என்று உலகம் இன்று மாறிவிட்டது. இதனால் இக்காலப்பகுதியில் வாழும் நாம் துடுப்பில்லா படகில் நடுக்கடலில் அலைக்களிக்கப்படுவது போல ஒரு உணர்வு மனிதர் மத்தியில் தோன்றுகிறது. சிறப்பாக பெற்றோர் பிள்ளைகளை கல்வியே வாழ்க்கை என்று வளர்த்தவர்கள் இப்போது ஏதோ தவறிவிட்டோம் என்று புலம்புகிறார்கள். எமது பொறுப்பு என்ன? எமது முயற்சி என்ன? எதிர்காலத்தை சந்திக்க எம் பிள்ளைகளை உருவாக்குவோமா?

**என்றும் கிறிஸ்துவில்**
**அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ்**
**மன்னா பதிப்பாசிரியர்**

## மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி

### ஆவணி 2023

01. புனித இராயப்பர் திருவிழா - வஞ்சியன்குளம்
- புனித அந்தோனியார் திருவிழா - பெரிச்சார்கட்டு (முருங்கன்)

05. மரியமாதா திருவிழா - மாளிகைத்திடல்
- புனித அந்தோனியார் திருவிழா - பெரியகட்டு

06. புனித அந்தோனியார் திருவிழா - பெரியபண்டிவிரிச்சான்
- குழந்தையேசு திருவிழா- மூன்றாம்பிட்டி, ஆலயங்குளம், ஈச்சளவக்கை, (விடத்தல்தீவு)
  மடுத்திருப்பதியில் திருவிழாவிற்கான நவநாள் ஆரம்பம்

10. புனித லோறன்ஸ் திருவிழா - தலைமன்னார்
  அருட்பணி. ஜோசப் பெனடிக்ற் தேவராஜா அடிகளாரின் நினைவு தினம் (2020)

15. மரியன்னையின் விண்ணேற்பு பெருவிழா - மடுமாதா திருவிழா (கடன்திருநாள்)

18. மடுமாதா திருவிழா - குட்செட்றோட்
- அருட்பணி. தேவதாசன் எட்வின் அ.ம.தி அடிகளாரின் நினைவு தினம் (2014)

19. புனித பரலோக அன்னை திருவிழா - பறப்பாங்கண்டல்
- புனித வேளாங்கண்ணி மாதா திருவிழா - தம்பனைக்குளம்

22. புனித பரலோக அன்னை திருவிழா - கோமரசன்குளம்
  வேதசாட்சிகளின் இராக்கினி அன்னை திருவிழா - தோட்டவெளி
  மடுஅன்னை திருவிழா - மதியாமடு (கனகராயன்குளம்)
  குழந்தையேசு திருவிழா - புதுக்குடியிருப்பு (அளவக்கை)
  அன்னை தெரேசா மறைபரப்பு அருட்சகோதரிகள் விழா

24. புனித பார்த்தலேமேயு திருவிழா - ஓலைத்தொடுவாய்

25. கிறிஸ்து அரசர் திருவிழா - பெரியமடு

26. புனித பரலோக மாதா திருவிழா - முள்ளிக்குளம்
- புனித அன்னை திரேசா திருவிழா - சுந்தரபுரம் (தரணிக்குளம்)

27. புனித அந்தோனியார் திருவிழா - கணேசபுரம்
- (தேவன்பிட்டி)
- மடு மாதா திருவிழா - சிதம்பரபுரம் (ஓமந்தை)
- புனித ஆரோக்கிய அன்னை திருவிழா - மன்னார் வைத்தியசாலை
- பங்கு வழிபாட்டுக்குழு தினம்

31. புனித சவேரியார் திருவிழா - ஆட்காட்டிவெளி

# மடுத்திருத்தல ஆடி பெருவிழாவில் ஆயர்தந்தை தமிழில் ஆற்றிய மறையுரையின் தொகுப்பு

கிறிஸ்துவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! மடு அன்னையின் பக்தர்களே! இரண்டாயிரமாவது ஆண்டிலே திருஅவையானது அன்றைய திருத்தந்தை தூய இரண்டாம் அருள் சின்னப்பர் தலைமையில் யூபிலி ஆண்டை கொண்டாடியது. பல ஆன்மீக தயாரிப்புகளோடு இவ்விழா கொண்டாடப்பட்டது. மீண்டும் 2025ம் ஆண்டிலே ஒரு யூபிலி விழாவை கொண்டாடுவதற்கான தயாரிப்புக்களை தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆரம்பித்திக்கின்றார். அதற்கான திட்டங்களை வத்திக்கான் வெளியிட்டிருக்கின்றது. இதன் முதற்கட்டமாக 2025ம் ஆண்டில் யூபிலி ஆண்டின் கருப்பொருளாக "நம்பிக்கையின் திருப்பயணிகள்" என்ற கருப்பொருளுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த வருடம் தை மாதம் 03ம் திகதி தமது ஒப்புதலை வழங்கி இருக்கின்றார். இந்த மையப்பொருளை ஆதாரமாக வைத்து ஒரு சின்னமும் தயார் செய்யப்பட்டிருக்கின்றது. உலகின் நான்கு பகுதிகளில் இருந்து வரும் மக்களையும் இம்மக்கள் ஒருவரையொருவர் தழுவியவராக பயணம் செய்யும் போது தான் சகோதரத்துவம், ஒற்றுமை மக்களிடையே நிலைநாட்டப்படலாம் என்பதை பிரதிபலிக்கின்ற வகையிலே இந்த சின்னம் வெளியிடப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்குரிய ஆயத்தப் படிமுறைகளை இலங்கை ஆயர் மன்றமும் ஆரம்பித்திருக்கின்றது. இரண்டுவருட தயாரிப்புகளை மேற்கொள்வதற்காக எதை நாங்கள் செய்ய வேண்டுமென்று இப்போது ஆலோசித்து கொண்டு வருகின்றது மிக விரைவிலே அதன் திட்டங்களை வெளியிடத் திட்டமிட்டிருக்கின்றது.

அன்பார்ந்த இறைமக்களே இன்றைய விழாவும் அதாவது மரியாள் தன் உறவினரான எலிசபெத்தை சந்திப்பதற்காக சென்ற பயணமும் தனது வாழ்க்கை பயணத்திலே நம்பிக்கையின் திருப்பயணியாக நடாத்திய முதலாவது திருப் பயணத்தின் பெருவிழாவாகும். மரியாள் நாம் அனைவரும் அறிந்தது போல பல திருப்பயணங்களை தன்னுடைய வாழ்க்கையிலே நம்பிக்கையின் திருப்பயணியாக மேற்கொண்ட ஒருவர். கலிலேயாவில் இருந்து பெத்லகேமிற்கும் குழந்தை இயேசுவை ஏரோதின் சதி திட்டத்திலிருந்து பாதுகாப்பதற்காக எகிப்து தேசத்திற்கும், மீண்டும் ஒவ்வொரு வருடமும் பாஸ்கா விழாவிற்காக ஜெருசலேமிற்கும், இறுதியாக தம் மகனோடு கல்வாரி மலைக்கும் திருப்பயணங்களை மேற் கொண்டவள் மரியாள். இந்தப் பயணங்களிலே நம்பிக்கையின் திருப்பயணியாக திருப்பயணங்களை மேற்கொண்டாள். இந்த பயணங்களில் மட்டும்தான் அன்னை மரியாள் நம்பிக்கையின் திருப் பயணியாக இருந்தாள் என்று சொல்ல முடியாது. தன்னுடைய வாழ்க்கை முழுவதுமே நம்பிக்கையின் திருப்பயணியாக தன்னுடைய வாழ்க்கை பயணத்தை திருப் பயணமாக ஆக்கி கொண்டவள் மரியாள். அவ்வாறென்றால் நம்பிக்கையின் திருப் பயணிகளின் பாதுகாவலியாக நாங்கள் மரியாளை கருதலாம். அன்பார்ந்தவர்களே! நம்பிக்கைதான் வாழ்க்கையிலே ஒருவரை ஒருவர் பிணைத்துக் கொள்வது. நம்பிக்கைதான் எங்களையும் கடவுளையும் ஒன்றாக்குகின்றது. நம்பிக்கை இல்லாவிட்டால் நாம் வாழ முடியாது. நம்பிக்கை இல்லை என்று சொன்னால் இன்று நீங்கள் இங்கே வரவும் முடியாது. நம்பிக்கை இல்லாமல் இங்கு நீங்கள் வந்திருக்கின்றீர்கள் என்று சொன்னால் நீங்கள் வேடிக்கைபார்க்க வந்த மக்கள், இல்லையென்றால் சம்பிரதாயத்தை நிறைவுசெய்ய வந்த மக்கள் அதாவது "நாங்கள் ஒவ்வொரு வருடமும் ஆடிப் பெருவிழாவிற்கு செல்கின்ற ஆட்கள் தானே எனவே இந்த வருடமும் போயே ஆகுதல் வேண்டும்" என்ற ஒன்று அந்த வருடாவருடம் நீங்கள் நிகழ்த்தி வந்த நிகழ்வை நிகழ்த்தி முடிப்பதற்காக வந்த மக்கள், அல்லது ஒரு சாதாரண பயணத்தை மேற்கொண்டு ஒரு களியாட்டமாக வந்து நாட்களை செலவளித்து விட்டு செல்வதற்காக வந்தவர்கள். இவை அனைத்தும் வேறுபடுகின்றது நம்பிக்கையோடு வந்திருந்தால் மடுஅன்னையின் திருப்பதியிலே வந்து மடுஅன்னையிடம் எங்களுடைய தேவைகளுக்காக செபிக்கின்றபொழுது மடு அன்னையானவள் எங்களை வெறுங்கையாக அனுப்பவே மாட்டாள் என்ற அந்த நம்பிக்கையோடு நீங்கள் வந்திருந்தால் இன்று நீங்கள் நம்பிக்கையின் திருப்பயணிகளாக மடுத் திருத்தலத்திலே இருக்கின்றீர்கள். ஒரு பயணம் திருப்பயணமாக மாறுவது நம்பிக்கையினால். புனித பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்திலே கூறுகின்றார் "இதனால் தான் இறைவன் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் தான் நான் இவ்வுலகில் வாழ்கின்றேன்" என்று. நம்பிக்கை இல்லை என்று சொன்னால் மக்களோடு வாழமுடியாது. தனியாக வாழவேண்டி வரும்.

ஆகவே அன்பார்ந்தவர்களே! நாங்கள் இறை நம்பிக்கையிலே வாழ கற்றுக் கொள்வோமாக. மரியாள் ஒரு நம்பிக்கையின் திருப்பயணியாக இருந்தாள் என்ற சொன்னால் வாழ்க்கை முழுவதும் பல சவால்கள், பல பிரச்சனைகள், மத்தியிலும் நம்பிக்கையை இழக்காமல் வாழ்ந்தால் என்று சொல்வதற்கு என்ன காரணம். மரியாள் முதலாவதாக இறைவனின் வார்த்தைகளிற்கு செவிமெடுப்பதன் மூலமாக இறை திட்டத்தை அறிந்துகொண்டவள். நற்செய்தியின் முன் வாழ்த்தொலியிலே கேட்டோம் "ஆண்டவர் உமக்கு சொன்னவை நிறைவேறும் என நம்பிய மரியாள்" என்று வாழ்த்தி பாடுகின்றோம். இறைவன் சொன்னதை கேட்டவள் மரியாள். இறைவார்த்தை அவளுக்கு சொல்லப்பட்டது. ஆனால் இறைவார்த்தை நாங்கள் விவிலியத்திலே வாசிக்கின்றோம். எங்களுக்கு வாசிப்பதற்கு கிடைக்கப்பட்டிருக்கின்றது. என்ன நிகழ்வுகள் வாழ்க்கையிலே நடந்தாலும் நாங்கள் இறைவார்த்தையை வாசிக்க கற்றுக் கொள்ளவேண்டும். எதை செய்யவேண்டும் என்று தத்தளிக்கின்றதை விட நாங்கள் வேதாகமத்தை படிப்போம். ஒவ்வொரு பிரச்சினைக்கும் மறுமொழி வேதாகமத்திலே இருக்கின்றது. ஒவ்வொரு வாழ்க்கை சூழ்நிலையையும் எவ்வாறு நாங்கள் கையாள வேண்டும் என்றும் வேதாகமத்திலே இருக்கின்றது. மரியாள் அந்த வார்த்தைகளை நம்பி வாழ்ந்தாள். இறை வார்த்தையை தன்னுடைய வாழ்க்கையிலே கற்றுக் கொண்டாள். இப்படியாக நம்பிக்கையின் திருப்பயணியாக மாறினாள். இரண்டாவதாக மரியாள் கடவுளோடு ஒன்றாக அந்த அந்நியோனியமான உறவை வைத்த ஒருவர். இறைவனுக்கும் மனிதருக்கும் உள்ள உறவுதான் செபம் என்று சொல்வார்கள். இன்று இரண்டாம் வாசகத்திலே நாங்கள் தூயபவுல் உரோமையருக்கு கூறுகின்றதை வாசித்தோம். "தளரா மனதுடன் இருங்கள் இறைவேண்டுதலில் நிலைத்திருப்போமாக" என்று புனிதபவுல் கூறினார். அவ்வாறாயின் நம்பிக்கையின் பயணிகளாக நாங்கள் மாறவேண்டுமென்றால் செபிப்போமாக. இறைவார்த்தைக்கு செவிசாய்த்து இறைவார்த்தையை படித்து செபிப்பதன் மூலமாக நம்பிக்கையின் திருப் பயணிகளாக மாறுவோமாக.

மூன்றாவதாக, அனுபவம். அனுபவத்தின் மூலமாக மரியாள் இது நம்பிக்கையின் வடிவம் என்பதை அறிந்து கொண்டாள். அவள் "இது எங்ஙனம் ஆகும் நான் கணவரை அறியேனே" என்று தன்னுடைய கலக்கத்தை வெளிப்படுத்தியது என்ன இறை அனுபவத்தை தன்னுடைய வாழ்க்கையிலே அனுபவித்த காரணத்தினாலேயே "இதோ ஆண்டவரின் அடிமை உம்முடைய வார்த்தையின் படியே ஆகட்டும்" என்று இறைவனுடைய திட்டத்திற்கு பணிந்தாள். இறைவனுடைய அந்த சொல்லை தன்னுடைய வாழ்க்கையிலே அனுபவித்தாள். மலையைப் பார்த்து பெயர்ந்து கடலில் விழு என்னும் பொழுது அது நிகழ்ந்து விட்டால் எங்களுடைய நம்பிக்கையை நாங்கள் கண்டு கொள்கின்றோம். நாங்கள் எங்களுடைய வாழ்க்கையிலே நம்பிக்கையை கண்டுகொண்டே தான் இருக்கின்றோம். ஆனால் இறைநம்பிக்கையால் வந்ததுதான் இது என்பதை நாங்கள் உணராதவர்களாக இருக்கின்றோம்.

அன்பார்ந்தவர்களே! நம்பிக்கையின் பயணிகளாக மாறுவதற்கு வேண்டிய நம்பிக்கை வளர்வது இறைவார்த்தையால். அந்த நம்பிக்கை வாழ்வது செபத்தால். அந்த நம்பிக்கை வலுப் பெறுவது அனுபவத்தால் இந்த மூன்றும் ஒன்றாக இருக்கும் பொழுது நீங்களும் நானும் நம்பிக்கையின் திருப்பயணிகளாக மாறுவோம். கன்னி மரியாளைப் போல ஒவ்வொரு நாளும் எங்களுடைய வாழ்க்கையிலே ஒவ்வொரு நிமிடமும் இறை நம்பிக்கையை கொண்டவர்களாக வாழ்வது இலகுவான தொன்றாக இருக்கும். இறைவார்த்தை செபம் அனுபவத்தின் மூலமாக எங்களுடைய வாழ்க்கையை கொண்டு செல்லுகின்ற பொழுது இன்றைய பதிலுரைப் பாடலிலே நாங்கள் பாடினோம் "இறைவன் என் மீட்பர் அவர் மேல் நம்பிக்கை வைக்கின்றேன்" என்று இன்றுமட்டும் பாடுகின்ற மக்களாக இல்லாமல் வாழ்க்கை முழுவதுமே பாடுவோமாக! நம்பிக்கைகொண்டு வாழ்வோமாக. ஆண்டவர் எங்களை கைவிட மாட்டார் என்று அந்த நம்பிக்கையிலே வளர்வோமாக. நானும் நீங்களும் வாழ்கின்ற இந்த காலம் நம்பிக்கை இழந்து சாதாரண பயணிகளாக எங்களை வாழத் தூண்டுகின்ற காலம். வறுமை, துன்பம், மனவேதனை மத்தியில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஒவ்வொருநாளும் பிரச்சினைகள் ஒவ்வொரு விதமாக இருக்கின்றது. இப்பிரச்சினைகளுக்கு யார் எங்களுக்கு பதிலைத் தருவார் என்று தெரியாமல் வாழுகின்றோம். இருந்தாலும், மரியாளோடு சேர்ந்து பயணம் செய்வோமாக. உள்ளத்திலே செருக்குடன் சிந்திப்போர் மத்தியில் இன்று வாழுகின்றோம். நலிந்தோரை அடக்கிஒடுக்குகின்ற வலியோர் மத்தியிலே நாங்கள் வாழுகின்றோம். பசித்தோரை வெறுங்கையராக அனுப்புகின்ற செல்வர்கள் மத்தியிலே நாங்கள் வாழுகின்றோம். எங்களுக்கு யார் ஒருவேளை உணவை வழங்குவார்கள் என்று அங்கலாய்த்துக் கொண்டு திரிகின்ற மக்கள் கூட்டம் இன்று எங்களுடைய நாட்டிலே பெருகி கொண்டு வருகின்றார்கள். எங்களுடைய துன்பங்களிற்கு யார் தீர்வைத் தருவார்கள் என்று தெரியாமல் அலைகின்ற மக்கள் மத்தியிலே நீங்களும் நானும் வாழ்கின்றோம். அன்று மரியாள் பாடிய நம்பிக்கையின் பாடல் ஒரு புரட்சிப்பாடல். அப்பாடல் இன்றும் தொடர்ந்து மரியாளுடன் இணைந்து நாங்கள் பாடிக் கொண்டே இருக்கின்றோம் ஒவ்வொருநாளும் மாலை செபத்திலே. இறைவனின் வல்லமையால் மாற்றங்கள் பல நிகழும் எனும் உறுதியை வழங்குகின்ற ஒரு பாடல். அவ்வாறென்று சொன்னால், அன்று மரியாள் தான் பாடிய பாடல் தான் தனியாக பாடிய ஒரு பாடலும் அல்ல. தன்னுடைய குரல்களை இழந்து பசியால் வாடுகின்ற வலிமையுள்ளவர்களால் நொருக்கப்படுகின்றமக்களுக்காக மக்களோடு சேர்ந்து பாடிய பாடல். அதனால் தான் அது நம்பிக்கையின் பாடல் மட்டுமல்ல ஒரு புரட்சியின் பாடல். இந்த மக்களுக்காக குரல் கொடுத்த ஒருவருடைய பாடல். அந்தப் பாடலை எங்களுடைய வாழ்க்கையிலே தொடர்ந்து தியானித்து நம்பிக்கையை எங்களுள்ளே வளர்த்துக் கொள்வோமாக. நம்பி வாழ்வோம். இறைவன் எங்களை ஒரு பொழுதுமே கைவிட மாட்டார், மருதமடு அன்னையானவள் எங்களை ஒருபொழுதுமே கைவிட மாட்டாள் என்கின்ற நம்பிக்கையோடு வாழ்வோம். நம்பிக்கையோடு வாழ்ந்தால் நிச்சயமாக எம் வாழ்க்கை ஒரு திருப்பயணமாக மாறும். எம் வாழ்க்கை இறைவனுடைய திட்டத்திற்கமைய வாழ்கின்ற வாழ்க்கையாக மாறும். எலிசபெத்தை போல தூயஆவியால் ஆட்கொள்ளப் பட்டவராக கடவுளை மகிமைப்படுத்துகின்ற வாழ்க்கையாக எம்முடைய வாழ்க்கை மாறும். இறைநம்பிக்கையை மிகவும் தாழ்மையான உள்ளத்துடன் வெளிப்படுத்திய மரியாளைப் போல இறைதிட்டத்திற்கு தலைவணங்குகின்ற மக்களாக நாம் மாறி, நம்பிக்கையின் திருப்பயணிகளாக இம்மருதமடு திருத் தலத்திலேயிருந்து அந்த நம்பிக்கையை எம் வாழ்க்கையின் கொடையாக பெற்றுக்கொண்டு அந்த நம்பிக்கையிலே வாழ்கின்ற மக்களாக வாழந்து, வருகின்ற 2025வது ஆண்டு யூபிலி விழாவிலே நம்பிக்கையின் திருப்பயணிகளாக மாற நாங்கள் மடுதமடு அன்னையின் வேண்டுதலை கேட்டு நிற்போமாக ●

# செய்திகள்

# மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிய குருக்கள்

இறைவனின் திருவருளால் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூன்று திருத்தொண்டர்கள் 13.07.2023 வியாழக் கிழமை அன்று மன்னார் ஆயர் பேரருட்கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் புனித செபஸ்தியார் பேராலயத்தில் குருக்களாக திருப் பொழிவு செய்யப்பட்டார்கள். திருத்தொண்டர் யேசுநேசன் ஜெல்த்சின் சார்லஸ், திருத்தொண்டர் பிரான்சிஸ் சேவியர் றஜீவன் லியோண், திருத்தொண்டர் பங்கிராஸ் ஸ்ரனி (IVD) ஆகியோரே குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர். பணி வாழ்வில் கால் பதிக்கும் எம் இளம் குருக்களுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக செபம் கலந்த நல் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம்.

**அருட்பணி ஜெல்த்சின் சார்லஸ் அவர்கள்**

ஜோசேவ்வாஸ்நகர் பங்கு நற்கருணைநாதர் ஆலயத்தைச் சேர்ந்த திரு திருமதி சிலுவைராசா யேசுநேசன் வின்சென்றி போல் மேரிகொண்செப்ரா ஆகியோரின் மூத்த மகனாக 1994.04.07 இல் விடத்தலூரில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை தோட்டவெளி அ.த.க. பாடசாலையிலும், உயர்தர கல்வியை மன். புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் கற்றார். 2008.01.08இல் மடுமாதா சிறிய குருமடத்தில் இணைந்தார். 2014 களுத்துறையிலும், 2015 கண்டி தேசிய குருமடத்தில் இறையியல், மெய்யியல் கற்கை நெறிகளை நிறைவு செய்து 2022 இறுதி பரீட்சையில் சித்தி பெற்றார். திருத் தொண்டர் பட்டத்திற்கு முன்பாக பேசாலை பங்கில் பணியாற்றினார். 2022.12.10 இல் மன்னார் மறைமாவட்ட ஆயர். பேரருட்கலாநிதி பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் திருத்தொண்டர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். திருத்தொண்டர் பணியினை முத்தரிப்புத்துறை மற்றும் பேராலயம் ஆகிய பங்குகளில் மேற்கொண்டார். இவர் விடத்தல் மண் ஈன்றெடுக்கும் 15வது குருமலர் ஆவார்.

**அருட்பணி றஜீவன் லியோன் அவர்கள்**

முத்தரிப்புத்துறை பங்கு செங்கோல் மாதா ஆலயத்தைச் சேர்ந்த திரு திருமதி பிரான்சிஸ் சேவியர் லியோன் சுகுணராணி பெர்னான்டோ ஆகியோரின் மூத்த மகனாக 1994.06.11 அன்று முத்தரிப்புத்துறையில் பிறந்தார். இவர் தனது ஆரம்ப கல்வி மற்றும் இடைநிலைக்கல்வியை மன். அரிப்பு றோ.க.த. பாடசாலையிலும், மேல்நிலைக்கல்வியை மன். புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியிலும் கற்றார். 2009.01.11 இல் மடுமாதா சிறிய குருமடத்தில் இணைந்தார். 2014 களுத்துறையிலும், 2015-2018 வரையான காலப்பகுதியில் கண்டி தேசிய குருமடத்தில் மெய்யியல், இறையியல் கற்கை நெறிகளை நிறைவு செய்து 2022 இல் இறுதி பரீட்சைக்கு தோற்றி சிறப்பு சித்தி பெற்றார். அருட்சகோதரராக பள்ளிமுனை பங்கில் பணியாற்றினார். 2022.12.10 அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்ணாண்டோ ஆண்டகையினால் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப் பட்டார். திருத்தொண்டர் பணியினை புனித செபஸ்தியார் பேராலயம், பள்ளிமுனை புனித லூசியா ஆலயம், இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயம் ஆகிய பங்குகளில் மேற்கொண்டார். இவர் முத்தரிப்புத்துறை பங்கின் 08வது குருமணி ஆவார்.

**அருட்பணி ஸ்ரனி (IVD) அவர்கள்**

பெரிய குஞ்சுக்குளம் பங்கு புனித அங்காமத்து மாதா ஆலயத்தைச் சேர்ந்த திரு திருமதி லூர்த்து நாயகம் பங்கிராஸ் பொனிப்பாஸ் இமல்டா ஆகியோரின் இரண்டாவது மகனாக 1990.10.17ம் ஆண்டு பெரிய குஞ்சுக்குள கிராமத்தில் பிறந்தார். இவர் தனது ஆரம்ப கல்வி மற்றும் இடைநிலைக் கல்வியை மன். பெரிய குஞ்சுக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் மேல் நிலை கல்வியை யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்திலும் கற்றார். 2009.07.30இல் திருவுளப்பணியாளர் சபை, கொழும்புத் துறை,யாழ்ப்பாணம் குருமடத்தில் இணைந்தார். 2014–2018 வரையான காலப்பகுதியில் கண்டி தேசிய குருமடத்தில் மெய்யியல்,இறையியல் கற்கை நெறிகளை நிறைவுசெய்தார். இவர் அருட்சகோதரராக இருந்த போது நுவரெலியா பங்கில் பணியாற்றினார். 2022.12.10 மன்னார் மறைமாவட்ட ஆயர். பேரருட் கலாநிதி பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டார். பின் திருத்தொண்டர் பணியினை நுவரெலியா மற்றும் கடவத்தை பங்குகளில் மேற்கொண்டார். இவர் பெரிய குஞ்சுக்குளம் பங்கின் இரண்டாவது குருமணி ஆவார்.●

# கன்னாட்டி புனித சூசையப்பர் ஆலய வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிலுவைப் பாதை நிலைகள்









கன்னாட்டி பங்க புனித சூசையப்பர் ஆலயத்தில் 03.07.2023 திங்கட்கிழமை அன்று மாலை 06.00 மணியளவில் நற்கருணை ஆராதனை வழிபாடு நடைபெற்றது. அதனை தொடர்ந்து சிலுவைப் பாதை நிலைகள் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டன. தொடர்ந்து சிலுவைப்பாதை நிலைகளை கட்டுவதற்கு துணையாக இருந்தவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வை பங்குதந்தை அருட்பணி அன்ரனி சோசை அடிகளார் மற்றும் உதவி பங்குதந்தை அருட்பணி ஜெரலிமன் அடிகளாரும் சிறப்பான முறையில் ஒழுங்கமைத்திருந்தார்கள். இதில் பல குருக்கள் துறவிகள் கலந்து கொண்டார்கள்.●

# பள்ளக்கண்டல் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நிகழ்வு



இலங்கை திருஅவையில் பிரசித்தி பெற்ற புனித அந்தோனியார் திருத்தலங்-களில் ஒன்றான பள்ளகண்டல் ஆலய திருவிழாவானது கடந்த 05.07.2023 அன்று தொடங்கியது. 08.07.2023 அன்று வெஸ்பர் ஆராதனைகள் நடைபெற்று 09.07.2023 அன்று காலை 10.00 மணியளவில் கண்டி மறை மாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை -யினால் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.●


01ம் பக்கத் தொடர்ச்சி

**திருக்குர்ஆன் எரிக்கப்பட்டதைக் குறித்து...**

புனித நூலான திருக்குரானின் பிரதிகளை தீயிட்டுக் கொளுத்திய நடவடிக்கைக் குறித்து தான் கோபம் மற்றும் வெறுப்பு கொள்வதாகவும், எதிர்மறை மற்றும் பொய்யான செய்திகள், நுகர்வுக்கலாச்சாரம் மீது ஈர்ப்பு, பகைமை, முன்சார்பு எண்ணங்கள், போன்றவைகளில் இளையோர் தங்களை இழக்காமல் இருக்க வேண்டுமெனில் சுதந்திரம், பகுப்பாயும் திறன், பொறுப்புணர்வு போன்றவைகளை வழங்கி நாம் உதவ வேண்டும் எனவும் தன் நேர்முகத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.●

# 11வது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்ட இரு அருட்பணியாளர்கள்





மன்னார் யாழ்ப்பாணம் ஆகிய இரு மறைமாவட்டங்களைச் சேர்ந்த இரு அருட்பணியாளர்கள் 11வது உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்டனர். சென்னை செம்மஞ்சேரியில் அமைந்துள்ள ஆசியவியல் நிறுவன வளாகத்தில் யூலை மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை பதினொராவது உலகத் தமிழ்ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி தமிழ்நேசன் அடிகளாரும் யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரும் கலந்துக்கொண்டு தங்கள் ஆய்வுக்கட்டுரைகளை சமர்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.●

# யோசேவ்வாஸ்நகர் பங்கின் திருஉடல் திருஇரத்தப் பெருவிழா

கடந்த 10.06.2023 அன்று மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் எமது வெஸ்பர் வழிபாடுகள் ஆரம்பமாகியது. இதில் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆணைக்குழு இயக்குநர் பெருமதிப்பிற்குரிய அருட்பணி. அ.விக்டர் சோசை அடிகளாரால் திருப்புகழ்மாலை பாடப்பட்டு, எமது மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் பெருமதிப்பிற்குரிய அருட்பணி. பி. கிறிஸ்துநாயகம் அடிகளாரால் நற்கருணை வழிபாடு நடாத்தப்பட்டு நற்கருணை பவனியுடன் நற்கருணை ஆசீரும் வழங்கப்பட்டது. பின்னர் திருஉடல் திருஇரத்த பெருவிழா திருப்பலி 11.06.2023 காலை 6 மணிக்கு மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஆணைக்குழு இயக்குநர் பெருமதிப்பிற்குரிய அருட்பணி. அ.விக்டர் சோசை அடிகளார் தலைமையில், எமது பங்குத்தந்தை அருட்பணி. செ. இராயநாயகம் மற்றும் அருட்பணி. ம.பிராங்டீப் அடிகளாரும் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. **மறையாசிரியர், யோசேவ்வாஸ்நகர்**●

01ம் பக்கத் தொடர்ச்சி

**2025ம் ஆண்டில் திருஅவை...**

1470ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு 25 ஆண்டு -களுக்கு ஒருமுறை புனித ஆண்டு அல்லது யூபிலி ஆண்டு கொண்டாடப்பட்டு வருகிறது. இது திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டு பாரம் -பரியப்படி கொண்டாடப்பட்ட ஓய்வு, மன்னிப்பு, புதுப்பித்தல் ஆகியவற்றின் பிரதிபலிப்பே ஆகும். யூதர்களிடையே யூபிலி ஆண்டு 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை சிறப்பிக்கப்பட்டதாக -வும், அக்காலத்தில் அடிமைகளும், சிறைக் கைதிகளும் விடுதலை செய்யப்படுவர் எனவும், கடன்கள் மன்னிக்கப்படும் எனவும், இறைவனின் இரக்கம் மனிதநடவடிக்கைகள் மூலம் வெளிப் படுத்தப்படும் எனவும் லேவியர் நூல் கூறுகிறது. 2025ஐ யூபிலி ஆண்டை கொண்டாடுவதற்கு முன்பாக, உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் இரண்டு ஆண்டுகளை யூபிலி ஆண்டுக்காக ஆயத்தம் செய்யும் படியாக திருத்தந்தை கேட்டு நிற்கின்றார். அவ்வடிப்படையில் 2023 ஆம் ஆண்டில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் நான்கு கொள்கைதிரட்டுகளை மீள அறிந்து கொள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

அவ்கொள்கைதிரட்டுகள்:

1. (Sacrosanctum Concilium) திருவழிபாடு
2. (Lumen Gentium) திருச்சபை
3. (Dei Verbum) இறை வெளிப்பாடு
4. (Gaudium et Spes) இன்றைய உலகில் திருஅவை

மேலும் 2024ஆம் ஆண்டில் யூபிலி ஆண்டிற் -கான தயாரிப்பாக "செப ஆண்டாக" மையப் படுத்தும் படியாக கேட்டுள்ளதோடு இதற்கான 9 உபதலைப்புக்களும் தெரிவுசெய்து தரப்பட்டுள்ளன●

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## சிறப்புப் பக்கம்

# மிசறியோ நிதியுதவியுடன் கறிராஸ் வாழ்வுதயத்தின் சூழல் பாதுகாப்புப் பிரிவினால் ஆனி மாதத்தில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள்:

MISEREOR
IHR HILFSWERK

**சர்வதேச சூழல் பாதுகாப்பு தின நிகழ்வுகள்**

சர்வதேச சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு கறிராஸ் வாழ்வுதயம் நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பிரிவினால் 29.05.2023 அன்று காலை 7.30 மணி தொடக்கம் 12.00 மணிவரை விழிப்புணர்வும், கடற்கரைத் துப்பரவுப் பணிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வானது மன்னார் பிரதேச செயலர் திரு. எம்.பிரதீப் அவர்களின் ஒழுங்கமைப்பிலும், வழிப்படுத்தலிலும் நடாத்தப்பட்டது.



வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை செ.அன்ரன் அடிகளார் 'சூழல் பாதுகாப்பின் முக்கியத்தும்' தொடர்பான கருத்துரையினை வழங்கினார். 'பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனை' தொடர்பான கருத்துரையினை மன்னார் பிரதேச செயலர் திரு. எம்.பிரதீப் அவர்கள் வழங்கினார். பின்னர், 170ற்கும் மேற்பட்ட சவுத்பார் மக்கள் ஒன்றிணைந்து தமது கடற்கரையில் காணப்பட்ட பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுப் பொருட்களை சேகரித்து துப்பரவு செய்தனர். சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் மன்னார் நகர சபையின் ஒத்துழைப்புடன் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



**கவனயீர்ப்புப் பேரணி**

' இயற்கைவளச் சுரண்டல்களில் இருந்து மன்னார் மாவட்டத்தைப் பாதுகாத்தல்' எனும் கருப்பொருளில் இப்பேரணியானது ஒழுங்கு செய்யப்பட்டது. காற்றாலைத் திட்டம், சட்டவிரோத மணல் அகழ்வு, இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல், காடழிப்பு, கண்டல் தாவரங்கள் அழிப்பு, வங்காலை பறவைகள் சரணாலயத்தில் கழிவுகளைக் கொட்டுதல், மரங்களை வெட்டுதல் முதலான இயற்கை வளச் சுரண்டல்களை உடன் நிறுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கோரி நூற்றிற்கும் மேற்பட்ட பயனாளிகளும், இளைஞர்களும் வாழ்வுதயம் அலுவலகத்தில்



இருந்து பேரணியாக மன்னார் கச்சேரியை அடைந்து மாவட்டச் செயலாளர் திருமதி. ஸ்ரான்லி டி மெல் அவர்களிடம் தங்கள் மகஜரைக் கையளித்தனர்.


**இயற்கையோடு இணைந்த இளையோர் வாழ்வு**

இளையோரின் வாழ்வினை இயற்கையோடு இணைந்ததாக ஊக்கப்படுத்தும் நோக்குடன் இயற்கைச் சுற்றுலாவும், இயற்கைச் செயற்பாட்டு நிகழ்வுகளும், விளையாட்டுக்களும் கங்வெல்ல இயற்கைவனப் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் சவுத்பார், காத்தான்குளம், முசலி, மடுறோட், முதலான இலக்கு கிராமங்களைச் சேர்ந்த 45 இளைஞர் யுவதிகள் பங்குபற்றி பயன்பெற்றுக்கொண்டனர்.

**தொகுப்பு:**
**ச.யேசுதாசன்**
**இணைப்பாளர் - கறிராஸ்-வாழ்வுதயம்**

## இம்மாத புனிதர்கள்

# புனித அந்தோனி மரிய சக்கரியா யூலை 05



மார்ட்டின் லூதர் ஒரு கத்தோலிக்க, அதுவும் ஒரு துறவற சபைக் குருவாக இருக்கும்போது, திருச்சபையில் நிலவிய பலவித தீமைகளைச் சுட்டிக்காட்டித் திருச்சபையை விட்டு வெளியேறினார். இதே அலங்கோலங்களைக் கண்ணுற்ற, லூத்தரின் காலத்தில் வாழ்ந்த புனித அந்தோனி மரிய சக்கரியா, திருச்சபைக்குள் இருந்துகொண்டே தம் ஈகை இரக்கச் செயல்களாலும் தமது புனித வாழ்க்கையாலும் பலரை மனந்திரும்பியது மட்டுமன்றி, ஆண்களுக்கு ஒன்றும், பெண்களுக்கு ஒன்றுமாக துறவற சபைகளை நிறுவினார். இவ்வாறு சபையின் அவலங்களை நீக்கும் முயற்சியில் ஈடுபட்டு மாபெரும் வெற்றியும் கண்டார். இக்கண்ணோட்டம் தான் அன்றும் இன்றும் என்றும் இன்றியமையாதது. இவர் புனிதர்களின் ஆன்மீக வாழ்வில் அக்கறை செலுத்தினார். ஏழை எளியோரின் உடல் நோய்களைக் குணப்படுத்த மருத்துவக்கலை பயின்று பட்டம் பெற்றார். மக்களின் உள்ளத்து நோய்களையும் குணமாக்க எண்ணி வேதக்கலையும் படித்து கிறிஸ்தவக் கோட்பாடுகளை மக்கள் அனைவருக்கும் போதித்தார்.

இவருக்கு கி.பி 1530இல் குருப்பட்டம் கொடுக்கப்பட்டது. உடனே "பர்ணபைட்ஸ்" என்ற துறவற சபையை நிறுவினார். இவரது தூண்டுதலின் பேரில் லூயிசா, டொரெல்லா என்ற ஒரு செல்வமகள் "ஏஞ்சலிக்கல்ஸ்" என்ற மகளிருக்கான துறவற சபையை நிறுவினார். இச்சபையின் சிறப்பு நோக்கம், வழிதவறிய பெண்களை மீட்பதும், அவர்களுக்கு புதிய சிந்தனைகளையும் உயரிய கண்ணோட்டங்களைக் கொடுப்பதுவுமே ஆகும். இத்தகைய அரும்பெரும் பணிகளிடையே தமது 36வது வயதில் விண்ணகம் சென்றார். அடிக்கடி திவ்விய நற்கருணை வாங்குவது, 40 மணித்தியால நற்கருணை திருமணி ஆராதனை போன்ற ஆன்மீக முயற்சிகளை இவர் தோற்றுவித்தார்.●

# கார்மெல் மலைப் புனித கன்னிமரி

யூலை 16



எபிரேய மொழியில் கார்மேல் என்ற சொல்லுக்குத் தோட்டம் என்பது பொருள். பாலஸ்தீன் நாட்டின் ஹை∴பா வளைகுடாவில், 1800 அடி உயரத்தில் இருக்கும் இந்தத் தோட்டத்தில் தான் பழைய ஆகமத்தில் இன்றைக்குத் திருச்சபையில் உள்ள கார்மேல் சபைத் துறவிகள், சிலுவைப் போர் நடந்த காலத்தில், பாதுகாப்பான இடத்திற்குச் சென்ற துறவிகளின் வாரிசுகள் எனப்படுவர்.

இங்கே கன்னிமரிக்கு ஒரு சிற்றாலயம் எழுப்பப்பட்டிருந்தது. நாளடைவில், அவர்கள் கன்னிமரியின் மீது கொண்டிருந்த சிறப்பான பக்தியின் மூலம் மக்களிடையே உத்திரியத்தைக் கழுத்தில் அணிந்து கொள்ளும் பக்தியைப் பரப்பி வருகிறார்கள். கி.பி 1257இல் அப்போது கார்மேல் துறவற சபைத் தலைவராக இருந்த புனித சைமன் ஸ்டாக் என்பவருக்கு மரியன்னை காட்சி தந்து உத்திரியம் அணிந்துகொள்ளும் பக்தியைப் பரப்பப் பணித்தாகவும் இந்தப் பக்தியில் நீடிப்பவர்கள் விண்ணகத்திற்குத் தவறாமல் செல்வர் என்றும் உறுதிபடக் கூறியதாக வரலாறு தெரிவிக்கின்றது.●

# புனித மரிய மதலேனம்மாள் யூலை 22



கலிலேயாவைச் சேர்ந்த மக்தல் நாட்டு மரியா தான் மரிய மதலேனா. இவரே இயேசுவின் சிலுவை அருகில் நின்று கொண்டிருந்தவர். ஆண்டவரின் அடக்கத்திற்கு உதவி புரிந்தவர். அவரது கல்லறை காலியாக விடப்பட்டு இருப்பதை முதன்முறையாகச் சுட்டிக் காட்டியவர். உயிர்த்த கிறிஸ்துவை (மரியன்னைக்குப் பின்) முதல் முறையாகக் காணும் பேறுபெற்றவர். ஆண்டவருக்கும், சீடருக்கும் பல வேளைகளில் உதவி புரிந்தவர்.

இவரிடமிருந்து ஏழு பேய்களை ஆண்டவர் ஓட்டியதாக அதாவது தீராத ஓர் கொடிய நோயை நீக்கியதாக லூக்கா நற்செய்தியாளர் கூறுகின்றார். தம் கண்ணீரால் ஆண்டவரின் திருவடிகளைக் கழுவி மனத்துயரை வெளிப்படுத்திய பெண் இவர்தான் என்று நற்செய்தியாளர்கள் ஒப்புக்கொள்வது இல்லை. ஏழு பேய்கள் இவரிடமிருந்து ஓட்டப்பட்டன என்பதால் இவர் தீமையில் ஊறிக்கிடந்தவர் என்று பொருள் கொள்ளக்கூடாது. புதிய, புதிய ஆராய்ச்சிகளின் பயனாக லூக் 7:36இல் சொல்லப்படும் நிகழ்ச்சியில் ஆண்டவரின் மலரடிகளைக் கழுவிய பெண்ணும் மதலேனாவும் ஒரே ஆள் என்று அறுதியிட்டுக் கூறலாம்.●

# புனித சுவக்கீன் அன்னம்மா யூலை 26



இந்தப் பெயர்களை நற்செய்தி நூல்களில் நாம் காண்பதில்லை. கி.பி 165ம் ஆண்டில் எழுதப்பட்டதாகக் கூறப்படும் யாக்கோபின் முதல் நற்செய்தி என்ற நூலில் இவற்றைக் காண்கிறோம். இந்நூல் இறை ஏவதலின் அடிப்படையில் காணப்படும் தொகுப்பைச் சாராதது. இவர்கள் இறைவனின் தாய் அன்னை மரியாளின் பெற்றோராவர். கி.பி 6ம் நூற்றாண்டில் கொன்ஸ்தான்திநோபிள் நகரில் ஜஸ்ரினியன் என்ற மன்னன் ஓர் ஆலயம் எழுப்பி அதைப் புனித அன்னாளின் ஆலயம் என அழைத்தார். இதற்கு 2 நூற்றாண்டுகளுக்குப் பின்னரே கீழ்த்திசைத் திருச்சபையில் புனித சுவக்கீனுக்குரிய பக்தி பரவலாயிற்று. எபிரேய மொழியில் சுவக்கீன் என்ற சொல்லுக்கு இறைவன் தயார் செய்கிறார் என்பது பொருள்.

இன்று சந்தானாள் மாதா திருநாள் பல இடங்களில் கொண்டாடப்படுவதை அறிவோம். மேலைநாடுகளில் இந்தத் திருநாள் தொடங்கப்பட்டு, இலங்கைக்கும் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து தமிழகத்துக்குப் பரவியதாகச் சொல்லப்படுகிறது. கீழத் திருச்சபையில் இத்திருநாள் காலங்காலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மேலைநாட்டுத் திருச்சபையில் இந்தத் திருநாள் 15ம் நூற்றாண்டிலிருந்து தான் இடம்பெறுகிறது.●

சிறப்புப் பக்கம்

# ஊறணி புனித அந்தோனியார் ஆலய 175ஆவது ஆண்டு விழாவும், 'ஊறணியம்' மலர் வெளியீடும்

- அருட்பணி. C.J. அன்ரனிபாலா -

இந்து சமுத்திரத்தின் மத்தியில், இலங்கைத்தீவின் எழில் கொஞ்சும் சோலையாம் யாழ் குடாநாட்டில், வலிகாமம் வடக்கில் (இலங்கையின் வடநேர் எல்லையில்) அமைந்துள்ளது, புகழ்பெற்ற ஊறணி புனித அந்தோனியார் ஆலயம். வரலாற்றுப் புகழ்பெற்ற திருத்தலங்கள் பல கொண்ட வலி-வடக்குப் பிரதேசத்தில் ஊறணி புனித அந்தோனியார் ஆலயம் அமைந்துள்ளமை தனிச்சிறப்பாகும்.

வருடாந்தத் திருவிழாவின் போதும் முதற் செவ்வாய்க் கிழமைகளிலும் கத்தோலிக்க மக்களும் இந்துமத மக்களும் பெருமளவில் ஒன்றுகூடி வந்து இங்கு இறைவனின் அருள் பெற்றுச் செல்கின்றனர். இந்த யாத்திரைத் தலத்தின் 175ஆவது யூபிலியாண்டில் பாதுகாவலர் விழாவை இம்மீள்குடியேற்றப் பங்கின் உள்நாடு மற்றும் புலம்பெயர் தேசங்களில் சிதறி வாழ்கின்ற மற்றும் ஊறணியில் மீளக் குடியேறிய மக்கள் இவ்வருடம் கொண்டாடுகின்றனர். அத்துடன் இப்பெருமை மிக்க வரலாற்று நிகழ்வில் முதன்மை வரலாற்றுச் சான்றாதாரமாக, முதன்முதலாக "ஊறணியம்" என்னும் ஆவணப் பதிவொன்று வெளியிடப் படுகின்றமை தொடர்பாகவும் இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

**முதல் சுண்ணக்கல் ஆலயம் - 1848**

சவால்கள் எதிர்ப்புகள் மத்தியிலேயே கிறிஸ்தவ நம்பிக்கை எப்போதும் ஆழமாக்கப்படுகின்றது. இந்த ஆலயத் தோற்றமும் மக்களின் நம்பிக்கை வளர்ச்சியும் சவால்களின் ஊடாகப் பயணித்த வரலாறாகவே காட்சியளிக்கின்றது. "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறை சாற்றுங்கள்" (மாற்16:15) என்ற இயேசுவின் வார்த்தைகளுக்கிணங்கி போர்த்துக்கேயர் காலத்தில் (குடாநாட்டில் 1620களில்) தொடங்கிய வலி-கிழக்கின் அச்சுவேலி, ஒட்டகப்புலக் கத்தோலிக்க குழுமங்களுடன் இணைந்திருந்த, வலி-வடக்கின் அச்சுவேலி, தெல்லிப்பளை, மயிலிட்டி("தலையாட்டி வளவு"இல் இருந்த மறைவிட செபக்கூடத்தில்), ஊறணிக் கத்தோலிக்க குழுமங்களில் இருந்தும், ஒல்லாந்தர் காலத்தில் 1685இல் பிடிபட்டு யாழ். கோட்டையை அகலமாக்கும் வேலைக்காகக் கொண்டு போகப்பட்டுக் கூரையில் இருந்து தவறி நிலத்தில் விழுந்து குற்றுயிராக இருந்து குணமாகும் வேளை தப்பியோடி வந்து இறந்தோரைப் பற்றி நல்லூர் சுவாமி சா. ஞானப்பிரகாசர், மயிலிட்டிப் பங்குத்தந்தைக்கு 18.10.1932இல் எழுதிய தனது கடிதத்தில் குறிப்பிடுகின்றார்.

கி.பி. 1687இல் "யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் மொழியடியில் யாழ். குடாநாட்டில் காலடிவைத்த புனித ஜோசவ்வாஸ் அடிகளுடன் தொடங்கிய கோவை ஒரட்டோறியன் சபை, இந்தியாவில் தடை செய்யப்பட்டு அக்குருக்களின் தொகை குறைந்த வேளை வலிகாமத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த மூன்று சிஸ்ரேசியன் சபைக் குருக்களில் அருட்பணி. புளோரன்ரைன் கார்சியாவால் 1848இல் அடிக்கல் நாட்டப்பட்ட, முதல் சுண்ணக்கல் ஆலயம் 25 வருடங்களின் எண்ணற்ற இடையூறுகளின் பின்பு அ.ம.தி.களின் காலத்தில்(1873) நிறைவுற்றது.

**யூபிலி விழாவும் ஊறணியம் வெளியீடும்**

பல தலைமுறைகளாக ஓரிடத்தில் வாழ்ந்து வரும்




மக்களுக்கு, அவர்களது கிராமம் அல்லது நகரம், மொழி, மதம், பண்பாடு, வழிபாட்டுத் தலங்கள் போன்றவை புனிதமானவையாகவும் பெருமைக்கு உரியவையாகவும் உள்ளன. குறிப்பாக அவர்கள் தங்கள் மதத்தையும் வழிபாட்டுத் தலங்களையும் உயிரினும் மேலான பற்றுடன் பேணி வருவர். இதனால் தான் எமது கிராமத்தின் நானூறாண்டு கத்தோலிக்க வரலாற்றை, நமது கோடி அற்புதர் புனித அந்தோனியார் ஆலய, நூற்றியெழுபத்தைந்து ஆண்டுகள் வரலாற்றை, அனைவரும் அறிந்து கொள்ளும் பொருட்டு "ஊறணியம்" என்ற மலரை எம்மால் கூடுமான அளவிற்கு முதன்மைச் சான்றாதாரமாகவும் ஊறணி வரலாறு பற்றிப் பேசும் முதல் ஆவணமாகவும் எமது பாதுகாவலரின் விழாவில் வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

ஏனெனில் எமது ஆலயமும் கிராமமும் பின்னிப் பிணைந்து இரண்றறக் கலந்திருப்பதால், எங்கள் முதாதையர், தமது கத்தோலிக்க நம்பிக்கைப் பயணங்களில் கடந்து வந்த மேடு பள்ளங்களில் இருந்து நாம் ஏராளமாகக் கற்கவும் நல்லவற்றைத் தேர்ந்து தெளிந்து எதிர்கால வாழ்விற்குப் படிக்கற்களாக்கவும் ஊறணியம் உதவுகின்றது. இவ்விபரங்கள் சிலவற்றுக்குத் தெளிவான சான்றுகள் உள்ளன. வேறு சில வாய்மொழிப் பாரம்பரியங்களாகவும் பலரது உண்மையான வாழ்க்கை அனுபவங்களாகவும் உள்ளன. ஆயினும் வேறு சில விடயங்கள் பற்றிச் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் நிகழ்தகவு அடிப்படையில் முடிவுகளுக்கு வரவேண்டியுள்ளது. நினைவுக் கெட்டாத காலம் முதல் இன்றுவரை ஊரின் மேற்குக் கடலோரம் வருடத்தில் எட்டு மாதங்கள் நன்னீர் ஊற்று ஒன்று கடலோடு கலப்பதாலும் பலர் அதில் குளித்துக் குணமடைவதாலும் ஊறணி என்று பெயர் பெற்றது எம் கிராமம்.

மேலும் 09 - 13ஆம் நூற்றாண்டுகளில் அரசர்களின் பாதுகாப்பிற்காக தென்னிந்தியக் கடலோரப் பட்டினங்களில் இருந்து கொண்டு வரப்பட்டு நெடுந்தீவு முதல் நயினாதீவு, காங்கேசன்துறை, பருத்தித்துறை, முல்லைத்தீவு, நாயாறு வரை வடபகுதிக் கடலோரம் முழுவதும்(நாகதேவன்துறை, வீரமாணிக்கதேவன்துறை, பெரியநாட்டான்தேவன்துறை, சின்னநாட்டான்தேவன்துறை) குடியிருத்தப்பட்ட தேவர்குலப் போர்வீரப் பரம்பரையினருள் (Sivaratnam C., The Tamils in Ceylon, United merchants Ltd., 71, Old moor street, Colombo - 12, 1968., pp.160 - 167) ஊறணி மக்களும் அடங்குவர். இவ்வீரப் பரம்பரையினர் தாம்பெற்ற கத்தோலிக்க நம்பிக்கையைப் புனித அந்தோனியார் நாமங்கொண்டு தமது இரத்தச் சாட்சியத்தாலும், கண்ணீரும் வியர்வையும் கலந்த உழைப்பாலும் வாழ்ந்து எம்மிடம் கையளித்தனர்.

13.06.2023 அன்று எம் பாதுகாவலர் விழாவைச் சிறப்பிக்கும் வேளை எமக்குப் பணிசெய்த முதியோரையும் மறைப் பணியாளர்களையும் கல்விச் சாதனையாளர்களையும் கௌரவிக்குமோர் கடப்பாடும் நம்முடையதாகின்றது. அதேவேளை காலஞ்சென்ற எம் முன்னோர்கள், மறைப் பணியாளர்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறி அவர்களின் ஆன்மா இறைபாதத்தில் இன்புற நாமெல்லோரும் வேண்டுவோம்.

*************

## கருணை காட்டிடுவாள் புனித கார்மேல் அன்னை..!



கார்மேல் அன்னையே.. எம் கலங்கரை விளக்கே..
கனிவோடெம்மை கண்நோக்கி பாருமம்மா...!
கவலைகள் மறந்து உவகையுடன் வாழ்ந்திட
காசினியில் எமக்கருள் ஈந்திடுமம்மா...!

உலகிலே பாவம் மலிந்து விட்டதம்மா...!
உத்தரியத்தாயே உற்றுப்பாருமம்மா...!
உறவுகள் எல்லாம் உதறிப்போனதம்மா...!
உம்பாதம் பணிந்தோம் ஒருமொழி கூறிடம்மா...!

பந்த பாசமெல்லாம் பணத்திற்கடிமையம்மா...!
சொத்து சுகங்கள் தான் இன்று சொர்க்கமானதம்மா...!
கற்ற கல்வி எல்லாம் காணாமல் போனதம்மா...!
சுற்றி வரும் உலகம் சூனியமாய் ஆச்சுதம்மா...!

போலி வாழ்க்கையே இன்று போதைப்பொருளானதம்மா...!
வேலியே பயிரை மேயும் காலமாய் போச்சுதம்மா...!
அன்றாட தேவைகளை அறிந்து தீர்த்திடம்மா...!
அழியாத நிலைவாழ்விற்கெம்மை அழைத்துச் சென்றிடம்மா...!

அன்னையே! அமலியே! எம்மை அன்போடணைத்திடம்மா!
அனுதினமும் உம் வாழ்வை வாழச் செய்யுமம்மா!
அன்னையே! தாயே! எம் அவலநிலை போக்கிடம்மா!
கார்மேல் தாயே! எமக்கருள் காட்டிடம்மா!



அ.ஜஸ்மின் ஷரோன்,
ஆவணம், நானாட்டான்.

## தந்தை (சிந்தனை மொழி)

தந்தை இருந்தால் பாரமில்லை
தந்தை காட்டும் பாதை தூரம் இல்லை
தந்தையின் கண்ணில் ஈரமில்லை
தந்தை போல் உலகில் யாருமில்லை
தந்தையின் பாசத்தில் பேதமில்லை
தந்தையை படி புத்தகம் தேவையில்லை
தந்தையை போல் ஆசானில்லை
தந்தையை பலர் இங்கு அறியவில்லை

தந்தையின் மொழி புரியவில்லை
தந்தை பிள்ளைகள் முன் அழுததில்லை
தந்தையை மகன் தொழுததில்லை
தந்தையை யாரும் பாராட்டவில்லை
தந்தையின் வியர்வை உறையவில்லை
தந்தையை பலர் உணரவில்லை

தந்தையை விட கங்கை உயர்வில்லை
தந்தைக்கு முன் ஏதுவுமில்லை
தந்தையின் அன்புக்கு நிகரில்லை
தந்தையை நேசி தொல்லையில்லை

A.நாதன் வதனா,
வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களைச் சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம் - **மன்னா நிர்வாகம்** -

## வாழ்க்கையின் மகத்துவம்

வாழ்க்கை வாழ்வதற்கு அழைக்கின்றது
வாழத் தொடங்கினால் அதில் அர்த்தங்கள் பல உண்டு
வாழ்க்கையை வாழ்க்கையாக வாழ்ந்து
காட்டுகின்றவர்களின் வாசகங்களை வாசியுங்கள்
பாதைகள் வகுத்த பின் பயணம் தொடர்வதே
பயனுள்ள வாழ்க்கையாக அமையும்
ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் ஏதோ
ஒன்றை சாதிக்க விளைகின்றான்
ஒரு சிலரால் மட்டுமே நிலைநாட்ட முடியும்
வாழ்க்கை என்னும் சமுத்திரத்தை நீந்திக்கடப்பது
கரைசேர்வது மிகவும் கடினம்
உலகிற்கு ஒளியாய் இருங்கள்
அணையா விளக்காய் எரிந்து கொண்டிருங்கள்
உங்கள் பிரகாசத்தில் பாதைகள் தெளிவாக தென்படட்டும்
உன்னத வழியது வாழ்ந்தால்
உயர்வுகள் வருவது திண்ணம்
வாழ்ந்துதான் பார்ப்போமே

ஆக்கம்
திருமதி. யேசுதாசன் யூக்கறிஸ்டா ஜடா,
புத்திரர் கண்டான்.

## பங்குத்தந்தையர்களுக்கு...

தங்களது பங்குகளில் நடைபெறும் சிறப்பு வழிபாடுகள். திருவிழாக்கள் தொடர்பான விடயங்களை மன்னாவில் பிரசுரிக்கும் பொருட்டு எமது மன்னா மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிறப்புப் பக்கம்

# சமூகவலைத்தளங்கள் இன்றைய சந்ததிகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்

ஜெ.கனிஸ்ரா - ஊடகக்கற்கைகள்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம் .

இன்றைய உலகில் இணையத்தை யாரும் பயன்படுத்தாமல் இல்லை. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் தன்பால் ஈர்த்துள்ள விடயமாக சமூகவலைத் தளங்கள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக இலங்கையை பொறுத்தவரையில் இளைஞர்கள் மத்தியில் முகப்புத்தகத்தின் பாவனை 80% காணப்படுகின்றது. எதிர்பார்க்காமல் திடீரென்று ஒருநாள் உலகம் முழுவதிலும் இணையத்தடை நிலவினால் எவ்வாறிருக்கும்? அப்போது மனிதர்களின் செயற்பாடு எவ்வாறிருக்கும்? என்பதைக் கற்பனை செய்தால் அது வேடிக்கையாக இருக்கும். ஆனால் இக் கற்பனைச் சம்பவத்தில் நம் மனக்கண்முன் வரும் கதாபாத்திரங்கள் அனைத்தும் கோபம் மற்றும் எரிச்சலுடன் கையில் Smart Phone, Lap வழி வைத்துக்கொண்டு ஓரிடத்தில் நில்லாது பித்துப்பிடித்தவர்களாக அலைந்து திரிந்த வண்ணம் இருப்பார்கள்.

உலகளவில் 150 கோடிக்கும் அதிகமானோர் சமூக வலைத்தளங்களைப்பயன்படுத்துகிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்களும் இளைஞர்களுமே. சமூக வலைத்தளங்களை இவ்வளவு பேர் பயன்படுத்துவதற்கு முக்கிய காரணம் அது மிக சுதந்திரமான களமாக இருப்பதும், அதில் ஒருவர் எதை வேண்டுமானாலும் பகிர்ந்து கொள்ள முடியும் என்பதுமாகும். உலக மயமாக்கலால் தனித்தனி மனிதர்களாகச் சுருங்கிப் போய்விட்ட சமூகத்தை சமூக வலைத்தளங்கள் ஒன்றிணைக்கின்றன. இவ்வலைத்தளங்கள் உருவாக்கப்பட்டமைக்கான உண்மையான காரணம் நபர்களுக்கிடையே சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்துவதும், வியாபார முன்னேற்றமும் ஆகும். இவ்வாறான தேவைகளுக்காக உருவாக்கப்பட்டவை இன்று மனிதர்களின் மூளையை ஆட்சி செய்து அவர்களது பொழுதுபோக்குத் தேவையாக இவை மாற்றம் பெற்றுவிட்டன.

இந்த வலைத்தளங்களில் எந்த அளவிற்கு நன்மைகள் உள்ளதோ அதே அளவிற்கு பயன்படாத முடியாத பாதக விஷயங்களும் காணப்படுகின்றன. இன்று நாம் இருப்பது இந்தக் கையடக்க உலகத்திற்குள்தான். உலகமே உள்ளங்கையில் அடங்கிவிட்டது என பெருமிதம் கொள்ளும் மனிதர்கள், தாங்கள் தான் இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாகியுள்ளோம் என்பதை இன்னும் உணரவில்லை.

சமூக வலைத்தளங்களின் பயன்பாடு என்பது இன்று ஒவ்வொருவரினதும் அத்தியாவசிய தேவையாக மாற்றம் பெற்றுள்ளது. நாளொன்றுக்கு ஒருவர் சுமார் 8 மணி நேரத்திற்கு மேலான நேரத்தை Face Book, Watsapp, Viber, IMO, Skype, line, Instagram, Twitter, Google, Messenger போன்ற பல வடிவிலான சமூக வலைத்தளங்களுடன் செலவிடுகின்றான். அதுமட்டுமன்றி இன்றுகூட பல செயலிகள் புதிது புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

இன்று பல குடும்பங்களின் பிரிவிற்கும், உறவுகளின் முறிவுக்கும் மற்றும் பல விவாகரத்துக்கள் ஏற்படுவதற்கும், பல்வேறுபட்ட நோய்கள் ஏற்படவும் மூலகாரணியாக சமூக வலைத்தளப்பாவனை அமைகிறது. இன்று உலகின் மூலை முடுக்குளில் நடக்கும் விடயங்களை அறிந்த ஒருவருக்கு



குடும்ப நடப்புக்களும் தன் அயலவர்கள் பற்றியும் தெரிவது இல்லை. கணவன் மனைவி இருவருமே தமது பெரும்பாலான நேரத்தை இவ் வலைத்தளப் பாவனையில் செலவிடுவதால் அவர்களுக்குள்ளே புரிந்துணர்வைப் பெறவோ, கருத்துப் பரிமாற்றம், அன்பான உரையாடல் போன்றவற்றிற்கோ நேரம் கிடைப்பதில்லை. மேலும் இப்பெற்றோர்களுக்கு தமது மழலைகளின் மொழி கேட்கவோ அல்லது அப்பிஞ்சுகளின் விரல் பற்றி விளையாடவோ ஆர்வம் எழுவது குறைவாகவே காணப்படுகின்றது. தமது பெற்றோர்களைப் பார்த்து வளரும் பிள்ளைகளும் சிறுவயது முதலே இவ்வலைத்தளப் பாவனை மீது ஆர்வம் கொள்கின்றார்கள். பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கென நேரம் ஒதுக்காது அவர்களின் பொழுது போக்கிற்காக இவ்வாறான சமூக வலைத்தள வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். இது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதிப்பதோடு அவர்களது முழு வாழ்வையும் சீரழித்து விடுகின்றது இது மறுக்க முடியாத உண்மை.

எங்காவது போனால் இந்த சூழலை இரசிப்பதற்கு பதிலாக அதை புகைப்படம் எடுத்து முகப்புத்தகத்தில் பதிவேற்றி அதன்மூலம் மகிழ்ச்சிகாணும் நபர்களாக மாறிவருகின்றனர் தற்போது வலைத்தளங்கள் ஒவ்வொருவருக்கும் அதிகமான நண்பர்களையும் அதிகளவு இணைத்துக்கொள்ள வேண்டும் என ஆசைப்படுகின்றார்களே தவிர தமது குடும்ப உறவினை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணுவது குறைவாகவே காணப்படுகின்றது. இவ்வாறு சமூக வலைத் தளங்களிற்குள் சிறுவர்கள் மூழ்குவதால் உண்மையான நண்பன் அல்லது நண்பி, சுதந்திரம், இரசணை, மனஅமைதி போன்ற பலவற்றை நாளாந்தம் இழந்து கொண்டே இருக்கின்றனர். தற்போது வலைத்தளங்களில் காலம் கழிப்பவர்களுக்கு குறைவான மனிதநேயம், மன அழுத்தம், சோர்வு, ஞாபகமறதி, சுயநலம் போன்ற குணங்கள் காணப்படுவதோடு கண் சார்ந்த நோய்கள் உயர் இரத்தஅழுத்தம், இதய, நரம்பும் பாதிப்புக்கள் போன்றனவும் ஏற்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர் அதிலும் கர்ப்பிணிப்பெண்களின் இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக குழந்தையின் வளர்ச்சியில் பாரியதொரு பாதக -மாகன விளைவுகளும் ஏற்படுத்துவதாக தெரியப்படுகிறது.

சிறுவர்களில் இச்சமூக வலைத்தளங்கள் ஏற்படுத்தும் பாதிப்பு அவர்களது கல்வி, சக மாணவர்களுடனான நட்பு, பெற்றோருடனான பிணைப்பு என அனைத்தையும் அழித்து விடுகின்றது. இன்றைய சிறுவர்கள் இளைஞர்களில் பலர் இச்சமூக வலைத்தளப் பாவனையால் பெற்றோரையே கொலை செய்யும் அளவிற்கு மூர்க்கமாக மாறி வருவதை நாம் அறியக்கூடியதாக உள்ளது. போதையை விட மோசமான பாதிப்பை ஏற்படுத்தும். இச்சமூக வலைத்தள பாவனைக்கு அடிமைப்படுவர்களுக்கு நாம் என்ன செய்கிறோம் என்பதே புரிவது இல்லை. இவர்களால் சிறுபொழுது கூட இவற்றை விட்டு பிரிந்து இருப்பது என்பது இயலாத விடயமாகும்.

அனைத்து விடயங்களிலும் சாதக மற்றும் பாதக விளைவுகள் ஏற்படுவது சகஜமாகும். அதில் சமூக வலைத் தளங்களால் சற்று அதிக பாதகங்கள் ஏற்படுகிறது. இவற்றிலிருந்து விடுபடும் வழியையும் நாமே தான் முயற்சிக்க வேண்டும். இவ்வாறான வலைத்தளப்பாவனைக்கு செலவிடும் நேரத்தை அன்றாடம் குறைத்துக் கொண்டு வருதல், ஓய்வு நேரம் மற்றும் விடுமுறை நாட்களில் குடும்பத்துடனும் குழந்தைகளுடனும் நேரத்தைச் செலவிடல் குழந்தையை பெற்றோர் தம் கண்காணிப்பின் கீழ் வளர்த்தல், வயதுக்கேற்ப இணைய அறிவை மட்டும் பெற்றுக்கொடுத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் நம்மை அடிமைப்படுத்திய இவற்றிலிருந்து விடுதலை பெற்று நமக்கு அடிமையாக இவ்வலைத்தளங்களை மாற்றிடலாம். மெல்ல நம்மை சிதைக்கும் இவ்வாறான விடயங்களில் இருந்து விடுபட்டு சிணுங்கும் கைபேசிகளுக்கும், மடிக் கணணிகளுக்கும் பதிலாக மழைச் சாரலையும், அழகிய இயற்கையையும் இரசிக்கக்கற்றுக் கொள்ளவோம். இணையத்தில் காணப்படும் சாதக, பாதகங்களை அறிந்து இனியாவது இணையத்தினை விட மனிதர்கள் தான் சிறந்தவர்கள் என்பதை உணர்ந்து வாழப்பழகுவோம்.●

# யார் கிறிஸ்தவன்?

கி. அருளப்பு – விடத்தல்தீவு.

"கிறிஸ்து + அவன் = கிறிஸ்தவன்." முதன்முதலில் அந்தியோக்கியா என்னும் இடத்தில் இயேசுவைப் பின்பற்றுவோர் ஏனைய மக்களால் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டனர். (தி.ப: 11.26) அதுவரை அவர்கள் சீடர்கள் என்றே அழைக்கப்பட்டனர். தற்போது திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் கிறிஸ்தவன், கிறிஸ்தவள் என்று அழைக்கப்படுகின்றோம். கிறிஸ்து ஒரு மதத்தை ஏற்படுத்த இவ்வுலகிற்கு வந்தவரல்ல. கிறிஸ்துவின் போதனைகள் உபதேசங்கள் ஒரு தனிப்பட்ட பிரிவினருக்கு மட்டும் உரியவை அல்ல. அவை மனித சமூகம் அனைத்திற்கும் பொதுவானவை யூதன் என்றோ, கிரேக்கன் என்றோ, அடிமை என்றோ உரிமைக் குடிமகனென்றோ வேறுபாடில்லை. ஆணென்றும் பெண்ணென்று மில்லை (கலாத்தியர்:3.28) அப்படியானால் கிறிஸ்தவர்களென்ற ஒரு பிரிவினர் அழைக்கப்படக் காரணம் என்ன? ஆரம்பகாலத்தில் கிறிஸ்துவின் போதனைகளை தங்கள் வாழ்க்கையில் கைக்கொள்வோமென உறுதிபூண்டு. ஒரு குழுவாய் சேர்ந்தனர். அவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளவில்லை. ஆனால் ஏனைய மக்கள் அவர்களில் கிறிஸ்துவின் போதனையை நடைமுறையில் கண்டதால் அவனே கிறிஸ்து. அதாவது கிறிஸ்து அவன் என்று அழைக்கலாயினர். ஒருவனை கிறிஸ்தவன் என அறிந்து கொள்வதற்கு பெயரோ, மதமோ, மொழியோ பயன்படாது. இக்காலத்தில் இயேசுவின் போதனைக்கும் வாழ்விற்கும் எந்த ஒரு தொடர்பு இல்லாதவர்களும் பிறப்பாலும் பெயராலும் மற்றவர்களால் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படுகின்றனர். அதே கிறிஸ்துவின் போதனைகளை சரிவர நிறைவேற்றிவரும் உண்மை கிறிஸ்தவர்கள் வெளிப்படையாக கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படாத நிலை இருப்பதை காண்கின்றோம். ஏன் இந்த நிலை? ஒருவன் உள்ளத்தில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால் மட்டும் போதாது. அவர் சொல்லும் செயலும் கிறிஸ்துவை வெளிப்படுத்த வேண்டும். இயேசு மூன்று நபர்களைத் தேர்ந்து கொண்டார். முன்னவர் சீமோன் இராயப்பர், அடுத்தவர் அருளப்பர், மற்றவர் யாகப்பர். இந்த அப்பர்களோடு சேர்ந்து ஏனைய ஒன்பது பேரையும் தேர்ந்து அப்போஸ்தலர்கள் என்று பெயரிட்டார். "உன் பெயர் பேதுரு, இந்த பாறையின் மேல் என் திருச்சபையை கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றிகொள்ளா! விண்ணரசின் திறவுகோலை உனக்கு தருவேன்" என்று இராயப்பரிடம் கூறுகின்றார். (மத்தேயு: 16.18-20)

முன்னோர்கள் சொன்னவற்றை அளிப்பதற்கோ, முறை மாற்றி வைப்பதற்கோ வந்தேனில்லை எந்நாளும் அவற்றை நிறைவேற்ற வந்தேன் இதை எந்தன் கடமையென ஏற்றுக் கொண்டேன். "விண்ணோடு மண்ணுலகம் உள்ள மட்டும் வேதங்கள் நிறைவேறும் சட்டங்கள் வாழும் எந்நாளும் ஓர் எழுத்தும் பொய்யாகாது" இது உண்மை என்று தான் உருவாக்கிய திருச்சபையை அவர்களிடம் ஒப்படைத்தார். அது இன்றுவரை பரந்துவிரிந்து பாரெங்கும் பரவி நிற்கின்றது. எத்தனையோ தடைகள் இடையூறுகள் மத்தியிலும் கறை திரையின்றி வளர்ந்து வருகின்றது. இன்று எம் மத்தியில் இருந்து மறைந்து போன 16வது ஆசீர்வாதப்பரான பாப்பரசர் இராயப்பர் வரிசையில் 265வது தலைமை என்பதில் திருச்சபை பெருமிதம் கொள்கிறது. "இராயப்பர் எங்கேயோ அங்கேயே திருச்சபை." இதுவே பாறை என்பதன் மறைபொருள் இச்சபைக்கென்று சில வெளியரங்கமான பாரம்பரியங்கள், சட்டங்கள், சடங்காச் சாரங்கள் உண்டு. அவைகளையும் கிறிஸ்தவன் செய்ய வேண்டியவனாக இருக்கின்றான். இவை இல்லாத பட்சத்தில் கிறிஸ்தவன் அல்லாதவன் ஆகின்றான்.

கிறிஸ்துவை பின்பற்றிய மனிதர்களை இரண்டு வகையாக பிரிக்கலாம். ஒன்று அவரது வார்த்தையால் ஈர்க்கப்பட்டு அவரை பின்பற்றியவர்கள், இன்னொன்று குணம்பெறும் பொருட்டு அவரை தேடியவர்கள். வெறுமனே புதுமைக்காகவும், குணத்திற்காகவுமே வந்தவர்கள் இவர்கள். அதைப் பெற்றவுடனேயே அவரை விட்டு விலகி விடுகின்றனர். ஆனால் இயேசுவைப் பின்பற்றியவர்களோ தங்களுடைய சுயநல எதிர்பார்ப்புக்களை முன் வைக்காமல் இயேசுவை பின்பற்றியவர்கள். அவர்கள் தான் சீடர்களாக மாற முடியும். வெறுமனே புதுமைகளை எதிர்நோக்கி இருந்தோம் என்றால் நாம் வெறும் பக்தர்களே. அதாவது பெயரளவில் கிறிஸ்தவர்களே. இயேசு பக்தர்களை அல்ல சீடரையே தேடுகின்றார். அதாவது உண்மை கிறிஸ்தவனையே தேடுகின்றார். நாம் பக்தர்களா? சீடர்களா என்பதை சுய ஆய்வு செய்வோம். சிந்திப்போம்!

கிறிஸ்தவர்கள் என்ற கௌரவப் பெயரைப் பெற்றுக் கொண்டு காலத்திற்கு காலம் அருட்சாதனங்களைப் பெற்று திருவிழாக்களையும், புனிதர்கள் விழாவையும் வெறுமனே கொண்டாடி ஏனோதானோ என்று நாம் இருப்போமானால் நாங்களும் ஒரு முடக்குவாதக் காரனை போலவே இருப்போம். உள்ளத்தால் கிறிஸ்தவனை நாம் அறியும் விதம் அவன் மனம். மரம் நல்லது கெட்டது என்று எவ்வாறு அதன் கனி வெளிப்படுத்தி நிற்கின்றதோ அவ்வாறு மனிதனின் நிலையை அவன் சொல்லும் செயலும் வெளிப்படுத்தி நிற்கும். கிறிஸ்தவன் வேறு கிறிஸ்தவம் வேறு. இயேசுவின் விழுமியங்களை அவரது போதனை -களை சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தி நிற்பவனே கிறிஸ்தவன். எனவே ஒருவனை கிறிஸ்தவன் என உணர்த்துவது புறம்பான எந்த அடையாளமோ பிறப்போ அல்ல. அவனது சொல்லும் செயலுமே. கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற நாம் உண்மைக் கிறிஸ்தவர்களா என இன்றே முடிவெடுப்போம். கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும். எமது நாளாந்த வாழ்வியல் கோலங்களில் இதனை இணைத்துக்கொள்ள முயற்சி செய்வோம்.●

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.240
## 1 சாமுவேல் 1-16 வரை

உங்கள் விடைகளை ஆடி மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்டசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ✱ | 06 | | 12 | | | | | 04 | |
| 22 | 30 | | | 25 | 16 | | ✱ | | 20 |
| | 07 | 21 | | | 19 | | ✱ | | |
| | ✱ | | | 08 | | | 27 | | ✱ |
| | 32 | ✱ | | 11 | ✱ | | | | 14 |
| 10 | 26 | | 01 | | | 15 | | 24 | |
| ✱ | | | ✱ | | 18 | ✱ | | | |
| | | 02 | 33 | | | 29 | | | 28 |
| | ✱ | 17 | | 23 | | | 05 | ✱ | |
| 09 | | | | ✱ | 03 | | 31 | | 13 |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

3. ............ வானம் வெளுத்தபோதே வெட்டி வீழ்த்தினர்.
4. அவருடைய ................ மகனின் பெயர் யோவேல்.
6. ஆனால் அவர்களைக் கண்டித்து.................
7. ஒரு படையினர் ஒபிரா வழியாகச் ................ நாட்டிற்குப் பிரிந்து சென்றனர்.
8. தடுமாறினோர் ................ பெறுகின்றனர்.
9. ................ பார்ப்பது போல் நான் பார்ப்பதில்லை.
10. பெத்லகேமைச் சார்ந்த ............................ டம் உன்னை அனுப்புகிறேன்.
16. ஒன்று போட்சேசு என்றும் மற்றொன்று .......................... என்றும் அழைக்கப்பட்டன.
17. பெலிஸ்தியரின் எல்லைக் காவல் ................ கணவாய் வரை நீடித்திருந்தது.
19. நான் உன்னிடம் வரை.............. நாள்கள் காத்திரு.
27. இவ்வனைத்து உங்கள் ..................... நடவடிக்கைகளைப் பற்றிக் கேள்விப்படுகிறேனே.
29. சாமுவேலின் ஆண்டவரின் .................. பெலிஸ்தியருக்கு எதிராக இருந்து.
30. அங்கே தரையில் ............ காணப்பட்டது.

### வலமிருந்து இடம்

4. சாமுவேலது வார்த்தை எதையும் அவர் .......................... விழ விடவில்லை.
5. ஆனால் உமது .................. நிலைக்காது.
7. கலகம் ............... யத்திற்கு நிகரான பாவம்.
13. இந்தத் ............... கடவுளாகிய ஆண்டவர் திருமுன் நிற்கத் தகுந்தவன் யார்?
14. உங்கள் மந்தைகளில் பத்தில் ஒரு ............... எடுத்துக் கொள்வான்.
27. ஆனால் நீங்கள் தொடர்ந்து ......................... செய்தால் விடுவீர்கள்.
31. அவன் ............... மீட்டுவதில் வல்லவன்.
32. ................. பெத்தாவேனையும் தாண்டி நடந்தது.
33. இதுவரை .............. பூட்டாத வண்டியில் பூட்டுங்கள்.

### மேலிருந்து கீழ்

4. என் கண்களில் அவனுக்குத் ................ கிடைத்துள்ளது.
11. அதற்கு அவர்கள், "அவரே .............!" என்றார்கள்.
12. ............ இன்னும் கில்காலில் இருந்தார்.
14. அங்கே ஆண்டவருக்கு ஒரு ............. பீடம் எழுப்பினார்.
18. அக்காலத்தில் .............. என்னும் முற்றுகையிட்டான்.
19. குரு ............... ஆண்டவரின் அமர்ந்திருந்தார்.
20. ............. கிரியத்து எயாரிமில் பல நாள்கள் தங்கியது.
21. என் ................. என் எதிரிகளைப் பழிக்கின்றது.
22. எனவே ....................... அமலேக்கியரிடமிருந்து விலகிச் சென்றனர்.
24. இதன்பின் அவர் ................... வாடியிருக்கவில்லை.
25. அவன் வழியோரம் ................................ இருக்கையில் அமர்ந்துக் காத்துக்கொண்டிருந்தார்.
26. ................... நாட்டு வழியே சென்றார்.
28. நான் உள்ளம் நொந்த ஒரு .............

### கீழிருந்து மேல்

1. ............. நீ ஏன் அழுகின்றாய்?
2. ............... பார்வை மங்கியிருந்ததினால் அவரால் பார்க்க முடியவில்லை.
3. பென்யமின் குலத்தில் .............. என்ற ஒருவர் இருந்தார்.
5. அப்போது மக்கள் அனைவரும் .................. நீடூழி வாழ்க என்று ஆர்ப்பரித்தனர்.
9. ஆண்டவர் அவரை ............... யாக்கியிருந்தார்.
11. ஆனால் உன் வயதில் ..................
13. ஒரு ............... பாறை வடக்கே இருந்தன.
15. அப்போது பள்ளத்தாக்கில் ............... அறுவடை செய்து கொண்டிருந்தார்கள்.
16. பிறகு, ஏலி, மனநிறைவோடு ...............
18. சவுலை அரசனாக்கியதற்காக .................. வருந்துகிறேன்.
21. அந்நகரின் கூக்குரல் ................ மட்டும் எழும்பியது.
23. இஸ்ரயேலின் .................. ஏமாற்றமாட்டார்.
28. சவுலும் இஸ்ரயேலரும் ............. மகிழ்ச்சி அடைந்தார்கள்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 238 சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



**முதலாம் பரிசு:**
A.P. குணாளன் மெக்ஸ்வெல்,
அளவக்கை பங்கு.



**இரண்டாம் பரிசு:**
சதீஸ்குமார் சர்சினி,
மகாறம்பைக்குளம்.

**மூன்றாம் பரிசு:**
செ. பெலிஸிற்ராஸ்,
அடம்பன்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 93 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 82 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.238ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. ஜோர்ச்குமார் ஆன் கரணியா - பறப்பாங்கண்டல் பங்கு.
02. T. றேச்சல் - பள்ளிமுனை.
03. T. ரேறியன் - பள்ளிமுனை.
04. R. எமி பிகிறாடோ - பள்ளிமுனை.
05. R. லிவி, பள்ளிமுனை.
06. விமலேஸ்வரன் கிறிஸ்ரி திவியன் - குழந்தையேசுபுரம்.
07. P. அன்ரனிகுறுஸ் சரன்சலாமேரி - துட்டுவாகை.
08. G. மேரி மெல்க்கிஷா - சிறுதோப்பு.
09. G. மேரி நிலுக்ஷா - சிறுதோப்பு.
10. கி. ஆன் சாலிக்கா - கட்டைக்காடு பங்கு.
11. சொ. சைலோ - கட்டைக்காடு பங்கு.
12. நி. நியோவின் பெனாண்டோ - முத்தரிப்புத்துறை.
13. R. ஜெகநாதன் - மடுக்கரை.
12. நி. நிஸ்ரின் பெனாண்டோ - முத்தரிப்புத்துறை.
13. ஆ. ஆன் அதிஸ்ரா குரூஸ் - பெரியபண்டிவிரிச்சான்.
14. ரவிசங்கர் சறோஜினி - ஜோசவ்வாஸ்நகர் பங்கு.
15. N. லிகாரா - கீரி.
16. S. நோபிள் - எமில் நகர்.
17. S. ஆன் றெபேக்கா - எமில்நகர்.
18. J. சாரா - எமில்நகர்
19. L. றியான் சட்விக் - எமில்நகர்.
20. S. ஆன் தெபோறா - எமில்நகர்.
21. ம. நெரோஜன் - கீரி.
22. செ. பிளசியன் - திருநாவற்குளம்.
23. J. ஜெவான்ஷிகா - கொவ்வங்குளம்.
24. டா. மேரி ஜோசேப்பின் - பள்ளிமுனை.
25. ஆன் ஸ்ரேசி றூபறாஜ் - பள்ளிமுனை.
26. T. மிறோன் றோச் - பள்ளிமுனை.
27. சந்தியோகு போல்றொபின்சன் - உயிலங்குளம்.
28. வின்சன் யோகவதி - உயிலங்குளம்.
29. A. ஜெயக்குமார் அபர்ணா - தோட்டவெளி.
30. அன்ரன் ஜெயக்குமார் அபிசான் - தோட்டவெளி.
31. அ. குணாளன் அபினாஷ் - அளவக்கை.
32. சி.வி. யோட்ஸ் - சின்னப்பண்டிவிரிச்சான்.
33. A. கவியாழினி - சின்னப்பண்டிவிரிச்சான்.
34. J. அன்ரனிற்றா யாழினி - சின்னப்பண்டிவிரிச்சான்.
35. அ. சுகணராஜ் - தேவன்பிட்டி.
36. அ. பார்த்தீபன் - தேவன்பிட்டி.
37. அ. இருதய சுகன்யா - தேவன்பிட்டி.
38. A. லூர்த்து நாயகி - தேவன்பிட்டி.
39. க. அமலன் அன்ரனீஸ் - தேவன்பிட்டி.
40. அ. அமல அபிநிதன் - தேவன்பிட்டி.
41. அ. அருட்கனி - தேவன்பிட்டி.
42. அ. அமல அபின்ஷா - தேவன்பிட்டி.
43. யோ. யூடிற் டலிமா - வங்காலை.
44. M. பிளண்ரீனா - சின்னக்கடை.
45. ம. மகாரத்தினம் - நெளுக்குளம்.
46. ச. மாக்கிறேற் - கட்டைக்காடு.
47. கி. நிர்மலா - தேவன்பிட்டி.
48. ச. ஜஸ்மின் கசில் - மடுக்கரை.
49. மா. லில்லி - பெற்றா.
50. க. டர்ஷிக்கா - நானாட்டான்.
51. க. ஜினுவிக்கா - நானாட்டான்.
52. அ. டிலக்சன் - மடுக்கரை.
53. T.S. லீலாவதி - சாந்திபுரம்.
54. றபேக்கா பற்றிக் - சின்னக்கடை.
55. யேசுநேசன் தர்சினி - திருநாவற்குளம்.
56. நவம் நவிசன் - சிறுதோப்பு.
57. றூ. மேரி பிறக்சி டயஸ் - வங்காலை
58. றூ. யூட்ஸ்சிக்கா டலிமா - வங்காலை
59. றூ. ஹறிஸ்மா டலிமா - வங்காலை
60. ஆ. றூபன் ஜீசஸ் டலிமா - வங்காலை
61. A. ஜோண்பொஸ்கோ பிகிறாடோ - பள்ளிமுனை.
62. J. மேரி பிரியங்கா - வலைப்பாடு.
63. P. அருளினி - வலைப்பாடு.
64. T. மாதந்தி - பறப்பாங்கண்டல்.
65. T. மதுநீதன் - பறப்பாங்கண்டல்.
66. A. அபி - புதுக்கமம்.
67. A. பெபிஷா - புதுக்கமம்.
68. வயலட் யோண் - யாழ்ப்பாணம்.
69. அ. அகிரன் குரூஸ் - தேவன்பிட்டி.
70. அ. அருள்பூரணி - தேவன்பிட்டி.

# மாறுதல்

ஆலயத்துக்குள் வருகையில்
தண்ணீர் தீர்த்தமாக மாறுகிறது!
சாம்பல் திருநீறு ஆகிறது!
அப்பம் இயேசுவின் திரு உடலாகவும்
இரசம் திரு இரத்தமாகவும் மாற்றம் பெறுகிறது!
நாமும் அர்ச்சிக்கப்படுவோம்
ஆசிர்வதிக்கப்படுவோம்
ஆலயம் நம்மையும் மாற்றட்டும்
நம் இயல்புகள் மாற்றம் காணட்டும்
புதிய இயல்புகள் நம்மில் பிறப்பெடுக்கட்டும்
இறைவனுக்கியைந்ததாய்
நம் இயல்புகள் இருக்கட்டும்
ஆலயம் தரும் மாறுதல் - நம்
அனைவரிலும் நிகழட்டும்.
அனைவரின் வாழ்வியலிலும்
மாறுதல் நிகழட்டும்.



**ஜெயாபாலாஜி - முருங்கன்.**

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

**பிறப்பு**
29
10
1934



**இறப்பு**
24
07
2022

## அமரர். அந்தோனி செபஸ்ரியம்மா டயஸ்

**பேசாலை**

**"நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுள் ஒருவரையும்
நான் அழிவுற விடவில்லை"**

பண்புக்கும், பாசத்துக்கும், பொறுமைக்கும் உறைவிடமான அம்மா!
ஆண்டொன்று போனாலும் உங்கள் கனிவான பார்வையும்,
மௌனமொழியுமே நெஞ்சத்தின் நினைவலைகளாக
நிழலாடி செல்கிறது அம்மா! உங்கள் பிரிவின் துயரத்தால்
நெஞ்சம் கசிந்து உருகி நிற்கின்றோம்.
ஆண்டவரின் சந்நிதியில் விண்மலராக மலர இறைவனிடம்
அனுதினமும் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

## மன்னா வாசகர்களே!

2023 யூலை மாதம் வரையான மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக செலுத்தி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை வழங்குங்கள்.

# மன்னா

# நினைவு கூருகின்றோம்..!

## 50வது ஆண்டு திருமண நிறைவு



திரு. திருமதி.
செபஸ்தியாம்பிள்ளை அலோசியஸ் (மாந்தை)
லூர்துமேரி (நாவற்குளம்)

**02.07.1973 - 02.07.2023**

ஆனந்த மழையிலே ஊற்றான இணைவுகள்
ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திடும் உறவுகள்
ஐம்பது ஆண்டுகள் இனிதாக கடந்து
இல்லறம் சிறந்து இன்பங்கள் மலர்ந்து
தமிழும் இனிமையும் போல்
வீணையும் நாதமும் போல்
எந்நாளும் இந்நாள் போல்
இணைபிரியா தம்பதியினராய்
என்றென்றும் இறைவன் துணைநிற்க
மனதார வாழ்த்துகிறோம்

வாழ்த்துவோர்
பிள்ளைகளான: கிறிஸ்ரீன், யேசுயதா, மனோகரன், மேரி இந்துஜா, மெரின் லக்சலா
மருமக்களான:.கி.யூலியற், இ.அன்ரன் லீனஸ், ம.ஜேற்றூட், ப.வசந்தராசா, வி.நியூட்டன்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1950 | 2023 |
| 04 | 06 |
| 05 | 05 |



**அருட்சகோ. லாசர் மிசேல் லெம்பேட்**
அன்புக்கன்னியர் சபை

"படைகளின் ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையாய் உள்ளது" (தி.பா. 84.1)

தனது இலட்சியவாழ்வில் நிறைவாக வாழ்ந்த எம் அன்புச் சகோதரியே, ஐம்பது ஆண்டுகள் இறை திருவடியில் ஆற்றிய உம் பணிகள் போதுமென்று நினைத்தோ, படைத்தவர் பதம் நோக்கி பயணித்தாய். உறவாக உனைச் சூழ்ந்திருந்தோம். அதை நினைவாக கொடுத்துவிட்டு இறைபதம் ஏகினாய். அழைத்தவன் அருகினில் அமைதியுடன் இளைப்பாறுங்கள்.

அன்பு உறவை இழந்து தவிக்கும்
பாசமுள்ள சகோதர சகோதரிகள், பெறாமக்கள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 | 02 |
| 12 | 07 |
| 1931 | 2021 |



**அமரர். பெனடிற் அகஸ்ரீனா**
(காசிப்பிள்ளை செல்வமணி)
தெற்கிலுப்பைக்குளம், வவுனியா

அன்புத்தாயே! ஆண்டுகள் இரண்டானாலும்
பிள்ளைகளின் நெஞ்சில் நிறைந்தவராகவும்
நினைவில் நின்றவராகவும் இருந்து
கொண்டிருக்கின்றீர்களல்லவா!

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
மகள்: பெயாற்றிஸ் உதயஇராணி (கனடா),
மகன்: சேவியர் ஞானமனோகரன்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1948 | 2021 |
| 03 | 07 |
| 13 | 18 |



**அமரர். சந்தியா மரியதாஸ் குரூஸ்**
பேசாலை, மன்னார்

"இதோ உன்னை பெயரிட்டு நாமே அழைத்தோம் ஆகவே நீ எமக்கே சொந்தம்"

காலங்கள் கடந்தாலும் உங்கள் நினைவுகள்
எம் மனதில் நிலைத்திருக்கின்றன
எங்கள் செபம் எப்போதும் உங்களுக்காகவே
உங்கள் ஆன்மா இறைவனின் பாதத்தில்
இளைப்பாற பிராத்திக்கின்றோம்.

பிரிவால் மனதுருகும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1950 | 2021 |
| 10 | 06 |
| 27 | 21 |



அமரர். திருமதி.
**பெயாற்றிஸ் வென்சஸ்லாஸ் பெர்னாண்டோ**
வங்காலை, மன்னார்

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் மகுடமாய், இகமதில் வாழ்ந்த எம் அம்மாவே! அனைவரையும் அன்பு செய்து அனைவராலும் அன்பு செய்யப்பட்டு நீங்கள் வாழ்ந்த அழகான வாழ்க்கைக்காக இறைவனுக்கு நன்றி சொல்கின்றோம். உங்கள் அன்பான பேச்சும், ஆதரவு நிறைந்த அரவணைப்பும் இனி எப்போது எமக்கு கிடைக்குமென்று ஏங்குகின்றோம். எம் வாழ்நாட்களை வசந்தமாக்கி விட்டுச் சென்ற வாடாத மலரம்மா நீங்கள் நாள்தோறும் உம்முகம் காணாமல் நாங்கள் தவிப்பது உமக்குத் தெரிகிறதா அம்மா, சடுதியாக விடை சொல்லி நீ சென்று விட்டாய். எம் கண்கள் மட்டுமல்ல எம் உள்ளமும் அழுவதை நீ அறிவாயோ அம்மா.
கருவினில் எம்மைச் சுமந்த உன்னை காலந்தோறும் எம் நெஞ்சினில் சுமந்திருப்போம் அம்மா! எப்போதும் ஆண்டவன் இல்லத்தில் அமைதியுடன் இளைப்பாற நித்தமும் நாம் இரஞ்சுகின்றோம் அம்மா!

பிரிவால் மனதுருகும்: கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர்கள்

## 14ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1997 | 2009 |
| 10 | 07 |
| 29 | 14 |



**செல்வி. குமார் ரினுஷா லக்ஷி**
எமில்நகர், மன்னார்

உன் நினைவின் நிழலில் ஈரேழு ஆண்டுகளும் கடந்ததம்மா...! காலத்தின் வேகம் தன்னில் நாட்களும் ஓடிடவே நாம் கொண்ட துயரமது எந்நாளும் மறையாதம்மா! கண்காணா உன்முகமும் மாறாத புன்சிரிப்பும் திகட்டாத நினைவோடு தீராமல் வாட்டுதம்மா! அரிதொரு வரமாய் கிடைத்திட்ட உன்வாழ்வை இடைநடுவே பறித்திட்ட துன்பமது மறவாதம்மா! குறையாத உன் குணமும், கனிவான உன் பேச்சும், மீட்டுகின்ற நினைவோடு எம்மைச் சூழ்ந்து நிற்குதம்மா! எத்தனை துயரங்கள் எம்மைச் சூழ்ந்து வந்தாலும் உன்முகம் காண அந்நொடியே மறைந்ததம்மா! இன்று உன்முகம் காணா ஒருநாளும் ஒருபொழுதும் உன் அழியா நினைவோடு ஆழ்துயராய் ஆனதம்மா!

உங்களது பிரிவால் துயருறும்: அன்பு அப்பா, அம்மா, அண்ணா, அம்மம்மா மற்றும் உன் அன்பு உறவுகள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1950 | 2021 |
| 03 | 07 |
| 04 | 28 |



**அமரர். செபஸ்ரியான் யேசுதாசன்**
முருங்கன்பிட்டி, முருங்கன்


"நான் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்"

மண்ணில் மலர்ந்து விண்ணில் உதிர்ந்து
ஈராண்டு நகர்ந்தும் எம்மை விட்டு அகலவில்லை
உங்கள் நினைவு.....
ஆறாத்துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத் துயில் கொண்டீர்கள்
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனை தினமும் பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் மனதுருகும்
குடும்பத்தினர்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1949 | 2021 |
| 04 | 07 |
| 09 | 16 |



**அமரர்.செபஸ்ரியான் கிறிஸ்தோப்பர்**
முருங்கன்பிட்டி, முருங்கன்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

அன்பு முகம் மறைந்தாலும் அழியாத உங்கள்
நினைவலைகள் ஆறாத்துயர் எம் நெஞ்சை அனலாய்
சுடுகிறதே உங்கள் நினைவுகள் எம் உயிரோடு
உணர்வோடு கலந்து இதயத்தில் என்றும் எங்களோடு
வாழ்கின்றீர்கள் எப்போதும் வாழ்ந்துகொண்டே
இருப்பீர்கள் எம் முன்னே உங்கள் முகம் எந்நாளும்
உயிர்வாழும் என்றும் உங்கள் நினைவுடன்

பிரிவால் நினைந்துருகும்: குடும்பத்தினர்

## 31ம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1941 | 2023 |
| 02 | 06 |
| 01 | 24 |



**அமரர் யக்கோவு சலமோன்**
மன்னார்

"உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர் எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கி இருப்பவர்"

பன்னீரேழு வயதினிலே - எம் கண்ணீரோடு விடைபெற்று சென்ற எங்கள் ஐயா... இல்லற வாழ்விலே பன்னீரைந்து ஆண்டுகள் நல்லறம் கண்டு வசந்தாவை தன் வசந்த மாளிகையாய் நேசித்து வாழ்ந்த எங்கள் ஐயா... ஏஞ்சலோடு மெலானியை தன் இரு கண்களாய் வளர்த்தெடுத்த எங்கள் ஐயா... தனது மருமக்களான ஜேக்கப், டானியல் இருவருமே தன்மீது கொண்ட அளவற்ற பாசத்தினால் தன் சொந்த பிள்ளைகள்போல் அவர்களை நேசித்தவர் எங்கள் ஐயா... என் செல்ல பேரக்குட்டிகளான கெவின், ஈபன், பிரதியுக்ஷா, டனோசிக்கா, துவிஷா.
உலகத்தில் வாழும்வரை ஐயாவின் நினைவுகள் மங்காது மறையாதென ஒய்யாரமாய் சொன்னீர்களே! எங்கள் ஐயா... உறவையும் உணர்வையும் வளர்த்தவர் எங்கள் ஐயா எம் உயிரோடு கலந்தவர் எங்கள் ஐயா... இந்த மண்ணிலே மறைந்த உங்களை அந்த விண்ணிலே ஓர்நாள் நாம் சந்திப்போம் எங்கள் ஐயா... சத்திய தேவனே! உம் நித்திய வீட்டிலே எங்கள் ஐயாவை பத்திரமாய் இளைப்பாற செய்வீராக.

பிரிவால் நினைந்துருகும்: குடும்பத்தினர்

## 8ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1928 | 2015 |
| 01 | 08 |
| 01 | 13 |



**திரு. ஞானப்பிரகாசம் சூசைமுத்து**

"பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத் 11:28)

அன்பு அப்பா கடந்த 13.08.2015இல் நீங்கள் எம்மை விட்டு பிரிந்து எட்டு வருடங்கள் ஆனாலும் உங்கள் அருமை இழந்து தவிக்கின்றோம். அப்பா! மௌனம் உங்கள் தாய்மொழி அல்லவே. உங்கள் சிம்மக்குரலை எம்மருகில் கேட்காவிடிலும் நீங்கள் எங்கும் போய்விடவில்லை என்ற உணர்வு எம்மிடம் உள்ளது. ஆன்மீக காரியங்களில் உங்களது அக்கறையும் கரிசனையும் அளப்பெரியது. நோயென்று படுக்காது யாரையும் வருத்தாது அமைதியில் இளைப்பாறிட எல்லாம்வல்ல இறைவன் உங்களுக்கு நல்மரணத்தைக் கொடுத்தருளினார். உங்களது ஆன்மா இறை சந்நிதியில் இளைப்பாறிட செபிக்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1949 | 2022 |
| 12 | 07 |
| 08 | 13 |



**எமிலியான் யக்கோவா**
சூரியகட்டைக்காடு, நானாட்டான்

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வார்"

எம் விழிநீரின் ஈரம் காயும் முன்பே ஓராண்டு நிறைந்தது. எனினும் ஆறவில்லை எம் துயரம் அன்பெனும் மழைபொழிந்து அகிலத்தில் எம்மை வாழவைக்க கலங்கரை விளக்காய் காவல் தெய்வமாய் எம்மை பாதுகாத்தீர்கள். உம் பிரிவால் ஏங்குகின்றோம் காலமெல்லாம் எம்மை காத்திருப்பீர்கள் என்று நினைக்க கண்ணீரைத் தந்துவிட்டுவிண்ணுலகம் சென்றீர்களே ஆற்றொண்ணாத் துயரமது எம் உள்ளத்தில் ஊற்றாகி ஓடுகின்றது பூமிதனில் பலயுகம் கடந்தாலும் உங்கள் அன்பை என்றுமே நாம் மறவோம் இறைவனின் உறவினில் நிரந்தரமாய் இணைந்திருக்க உமக்காய் இறைவனின் உலவினில் நிரந்தரமாய் இணைந்திருக்க உமக்காய் இறைவனை இறைஞ்சுகின்றோம்

என்றும் நீங்காத நினைவுகளுடன்: அன்புக் கணவர், பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.